
பகவத் தரிசனம்
மதத்தின் போர்வையில்
நாஸ்திகம்



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சார்யர்

## இதழின் உள்ளே...


5 மாயையை நீக்கும் மருந்து

10 மீண்டும் எலியாக மாறு, படக்கதை

13 மதத்தின் போர்வையில் நாஸ்திகம்

20 இராவணன் சீதையைத் தீண்டாமல் இருந்ததற்கான காரணம்

21 உங்களின் வரிகளும் கேள்விகளும்

24 குறளின் குரல், இறையருள்

26 கலைஞர் கருணாநிதியுடன் ஒரு சந்திப்பு

28 ஜட இயற்கையைப் புரிந்துகொள்ளுதல்

31 அனைத்தையும் நாங்கள் வழிபடுகிறோம்

33 கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

34 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோயில்கள்

















### இப்பத்திரிகையின் குறிக்கோள்

• உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல் • ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல் • ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல் • வேத பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல் • பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல் • முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# பகவத் தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

**மலர் 5, இதழ் 11 (நவம்பர் 2016)**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *பகவத் தரிசனம்*.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழை திருத்தம்:** இராம கிங்கர தாஸ், கேசவ பலராம தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, பூம்பாவை ராஜசேகர், மதுமதி பிரியா தேவி தாஸி, வேங்கடேஷ், ஜெய கிருஷ்ண தாஸ், ஸனக குமார தாஸ்.

**பதிப்பாசிரியர்:** உஜ்வல் ப்ரஃபுல் ஜாஜோ

**அலுவலக உதவி:** ஸத்ய நாராயண தாஸ், கேசவ பலராம தாஸ், வேங்கடேஷ், லவகுஸ தாஸ், கமலகண்ணன்.

**சந்தா அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600011. தொலைபேசி: 98948 14553, 95434 82175.

**வாட்ஸ்-அப்:** 95434 82175

**மின்னஞ்சல்:** tamilbtg@gmail.com

**பதிப்புரிமை** © 2016, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே. பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளைக்காக உஜ்வல் ப்ரஃபுல் ஜாஜோ, 33, ஜானகி குடிர், ஜுஹு சர்ச் எதிரில், ஜுஹு, மும்பை - 400049 அவர்களால் பிரசுரிக்கப்பட்டு, அவர்களாலேயே துளசி புக்ஸ், 7, கே.எம். முன்சி மார்க், சௌபாத்தி, மும்பை - 400007 என்னும் இடத்தில் அச்சிடப்பட்டது. தொகுப்பாசிரியர்: ஸ்ரீ கிரிதாரி தாஸ், இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600011.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை



## தினமும் சொல்வீர்!

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

**மகிழ்ச்சியடைவீர்!!!**

**www.tamilbtg.com**

# மாயையை நீக்கும் மருந்து

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்



நூனம் ப்ரமத்த: குருதே விகர்ம
யத் இந்த்ரிய-ப்ரீதய ஆப்ருணோதி
ந ஸாது மன்யே யத ஆத்மனோ 'யம்
அஸன்ன் அபி க்லேஷத ஆஸ தேஹ:

"புலனின்பமே வாழ்க்கையின் பிரதான நோக்கம் என்று கருதுபவன் நிச்சயம் பௌதிக வாழ்வில் பைத்தியமாகி பல்வேறு பாவச் செயல்களில் ஈடுபடுகிறான். முந்தைய பாவச் செயல்களின் பலனாக தான் அடைந்துள்ள உடல், தற்காலிகமானதாக இருப்பினும், துன்பத்திற்கு காரணம் அதுவே என்பதை அவன் அறிவதில்லை. உண்மையில் உயிர்வாழி பௌதிக உடலை பெற்றிருக்கக் கூடாது; ஆயினும், புலனுகர்ச்சிக்காக அவனுக்கு பௌதிக உடல் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், பிறவிதோறும் உடல்களை மாறி மாறித் தரவல்ல புலனுகர்ச்சி செயல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது புத்திமானுக்குப் பொருந்தாது என்று நான் கருதுகிறேன்." (ஸ்ரீமத் பாகவதம் 5.5.4)

## மக்களின் பைத்தியக்காரத்தனம்

மக்கள் தங்களது புலன்களை திருப்தி செய்வதில் பைத்தியமாக உள்ளனர் என்று பகவான் ரிஷப தேவர் இங்கே கூறுகிறார். ப்ரமத்த: என்றால் "மிகவும் பைத்தியமானவன்" என்று பொருள். புலன்களைத் திருப்தி செய்வதில் தீவிரமான வெறியுடன் இருப்பதே மக்களின் பௌதிக நோயாகும். அடுத்ததாக, குருதே விகர்ம, புலன்களை திருப்தி செய்வதற்கான இந்த பற்றுதலால் மக்கள் எந்த வகையான அபத்தமான செயல்களிலும் ஈடுபடுவதற்கு தயாராக உள்ளனர். எடுத்துக்காட்டாக, திருடுவது நல்லதல்ல என்று ஒருவனுக்குத் தெரிந்தாலும், புலன்களை திருப்தி செய்யும் ஆசையினால் அவன் திருடுகிறான். திருடினால் தண்டிக்கப்படுவேன் என்பதை அறிந்தும், அவன் பாவச் செயல்களைச் செய்கிறான். இது பைத்தியக்காரத்தனம்.

புலன்களை திருப்தி செய்வதில் நாம் இவ்வளவு மும்முரமாக உழைக்க வேண்டுமா என்பதை நாம் தத்துவ ரீதியில் யோசித்துப் பார்க்க வேண்டும். புலன்கள் என்றால் என்ன? புலன்கள் இந்த உடலின் ஒரு பகுதியாகும். இந்த உடல் என்னுடையதாக இருந்தால், என்னுடைய புலன்களை திருப்தி செய்வதில் ஓர் அர்த்தம் இருக்கிறது. ஆனால் இந்த உடலை நான் எனது தாய் தந்தையிடமிருந்து பெற்றேன். ஆகையால் இந்த உடல்

அவர்களுடையது. நான் ஓர் அடிமையாக இருந்தால், இந்த உடல் எனது முதலாளிக்கு சொந்தமானது. நான் ஒரு நாட்டின் குடிமகனாக இருந்தால், இந்த உடல் அந்த நாட்டிற்குச் சொந்தமானது. "நாட்டில் போர் நடக்கிறது, உடலை போரில் தியாகம் செய்ய வாருங்கள்" என்று நாடு அழைத்தால், நீங்கள் இதை தியாகம் செய்யவேண்டியதுதான்.

எனவே, நீங்கள் உங்களது நிலையை ஆய்வு செய்தால், இந்த உடல் உங்களுக்குச் சொந்தமானது அல்ல என்பதைக் காண்பீர்கள். அவ்வாறு இருக்கையில், உடலின் புலன்களை திருப்திபடுத்துவதில் ஆவலாக இருப்பது ஏன்? புரிந்துகொள்ள முயலுங்கள். புலன்களை திருப்தி செய்வதற்காக ஏன் பைத்தியம் போல முயற்சி செய்ய வேண்டும்?

## வாழ்வின் குறிக்கோள்

ஆகையால், புலன்களை திருப்தி செய்ய முயல்பவர்களை ஸ்ரீமத் பாகவதம், ப்ரமத்த, தீவிரமான பைத்தியங்கள் என்று கூறுகிறது. இந்த



நம்மிடம் உள்ள பணத்திற்குத் தகுந்த வீடுகளை நம்மால் வாங்க முடியும்; அதுபோல, நமது கர்மத்திற்கு ஏற்ற உடலை நாம் பெறுகிறோம்.

பைத்தியக்காரத்தனத்தின் விளைவால், நாம் பல்வேறு வகையான உடல்களைப் பெறுகிறோம். ஆனால் எதுவுமே நமக்குச் சொந்தமானதல்ல. எடுத்துக்காட்டாக, பணத்திற்கு தக்கவாறு பலவகையான குடியிருப்புகள் உள்ளன. உங்களால் நிறைய பணம் கொடுக்க முடிந்தால், நியூயார்க்கில் நல்ல குடியிருப்பு கிடைக்கும். உங்களால் பணம் நிறைய கொடுக்க முடியவில்லையெனில், குறைந்த மதிப்புடைய குடியிருப்பில் சந்தோஷமாக இருக்க வேண்டியதுதான். அதுபோலவே, முந்தைய பிறவியில் நாம் எவ்வாறு செயல்பட்டோம் என்பதை பொறுத்துதான், நமது உடல் நமக்கு கிடைக்கிறது.

மீண்டும் ஓர் உடலைப் பெறுவதற்கான அவசியம் இல்லாதபடியான, ஓர் உடலைப் பெறுவதே நமது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆனால், மக்கள் இதை அறிவதில்லை. ஆகையால், நாங்கள் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை நிறுவியுள்ளோம். குழம்பிய மனித சமுதாயத்திற்கு வாழ்க்கையின் நோக்கத்தை எடுத்துரைப்பதே எங்களின் நோக்கம். பகவத் கீதையில் கிருஷ்ணர் (8.15) கூறுகிறார்:

*மாம் உபேத்ய புனர் ஜன்ம துஃகாலயம் அஷாஷ்வதம்*
*நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்திம் பரமாம் கதா:*

"பக்தி யோகிகளான மகாத்மாக்கள் என்னை அடைந்த பிறகு, முற்றிலும் துன்பம் நிறைந்த இந்த தற்காலிகமான உலகத்திற்கு திரும்பி வருவதே இல்லை. ஏனெனில், அவர்கள் மிகவுயர்ந்த பக்குவத்தை அடைந்துவிட்டனர்." உங்களுக்கு மன்னரின் உடல், நாயின் உடல் என எந்த உடல் கிடைத்தாலும், அது ஜடவுடல் என்பதால், துன்பப்பட்டே ஆக வேண்டும். இதிலிருந்து தப்பிக்க முடியாது.

## உண்மையான மகிழ்ச்சி

அமெரிக்காவின் சில கனவான்கள் இந்தியா வறுமையில் வாடும் நாடு என்ற அபிப்பிராயத்துடன் இருப்பதை நான் சில நேரங்களில் கவனித்துள்ளேன். அந்த அபிப்பிராயம் உண்மையல்ல. ஆயினும், இந்தியா வறுமையில் வாடும் நாடு என்பதை நாம் வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும், அமெரிக்கா மகிழ்ச்சியான நாடு என்று அர்த்தமில்லை. அமெரிக்கர்கள் தங்களிடம் போதுமான அளவு பணம் இருப்பதால், மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று நினைக்கின்றனர், ஆனால் இது தவறு. அமெரிக்காவில் அவ்வளவு மகிழ்ச்சி இருந்தால்,

ஏன் அமெரிக்க இளைஞர்களும் யுவதிகளும் ஹிப்பிகளாக இருக்கிறார்கள்? மகிழ்ச்சி என்பது மாறுபட்டதாகும். நமக்கு ஜடவுடல் இருக்கும் வரை—அந்த உடல் அமெரிக்க உடலாக, இந்திய உடலாக, அல்லது எந்த உடலாக இருந்தாலும்—மகிழ்ச்சி என்ற கேள்விக்கே இடமில்லை.

தத்துவ அறிஞர்களும் விஞ்ஞானிகளும் துன்பத்திற்கான உண்மையான காரணத்தை ஆராய்வதில்லை. ஒவ்வொருவரும் துன்பங்களிலிருந்து தப்பிக்க முயல்கின்றனரே தவிர, யாருமே துன்பத்திற்கான உண்மையான காரணத்தை அறிவதற்கு முயல்வதில்லை. உண்மையான காரணம் இந்த உடல்தான். துரதிர்ஷ்டவசமாக, இந்த உடல் என்றால் என்ன? இஃது எவ்வாறு வேலை செய்கிறது? ஆத்மா என்றால் என்ன? ஆத்மா ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுக்கு எவ்வாறு மாறுகிறது என்பதை மக்கள் அறிவதில்லை. அவர்கள் எல்லாரும் முட்டாள்களாகவும் அயோக்கியர்களாகவும் உள்ளனர். அவ்வாறு இருந்து கொண்டு, அவர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயல்கின்றனர்.

## மறுவுலகம் செல்வோம்

எனவே, எங்களது கிருஷ்ண பக்தி இயக்கத்தின் நோக்கம் கிருஷ்ணரிடம் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதே. இந்த ஜடவுலகிற்கு அப்பால் மற்றொரு உலகம் ஒன்று உள்ளது. நாம் ஜட இயற்கையை அறிந்துகொள்வதில் மும்முரமாக உள்ளோம்—இங்கே எண்ணற்ற கிரகங்களும் நட்சத்திரங்களும் உள்ளன—ஆனால் நடைமுறையில் நமக்கு இந்த ஜடவுலகைப் பற்றி மிகக் குறைந்த அறிவே உள்ளது. இந்த ஜடவுலகம் கடவுளுடைய படைப்பில் நான்கில் ஒரு பகுதி மட்டுமே என்பதை நாம் வேத சாஸ்திரங்களிலிருந்து அறிகிறோம். இந்த உலகத்திற்கு அப்பாற்பட்ட "ஆன்மீக இயற்கை" எனப்படும் மற்றோர் இயற்கை உள்ளது. அங்கே வைகுண்டங்கள் எனப்படும் ஆன்மீக லோகங்கள் உள்ளன. அந்த வைகுண்ட லோகங்களில், கோலோகம் எனப்படும் கிருஷ்ணருடைய லோகமே மிகவுயர்ந்ததாகும்.

## ஹரி நாமமே தீர்வு

கிருஷ்ண பக்தி இயக்கத்தின் நோக்கம் கிருஷ்ண லோகத்திற்கு மாற்றம் பெறுவதற்கு உதவிசெய்வதே. அதற்கான வழிமுறை இந்த யுகத்தில் மிக எளிமையானதாகும்: ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரித்தால் போதும். சண்டை சச்சரவுகளும் கருத்து வேறுபாடுகளும் நிறைந்த இந்த யுகத்தில் ஹரே கிருஷ்ண உச்சாடனத்தைத் தவிர வேறு வழியில்லை. தியானம், யாகம், கோயில் வழிபாடு போன்றவற்றை நம்மால் முறைப்படி செய்ய முடியாது; ஏனெனில், தற்போதுள்ள சூழ்நிலை முந்தைய யுகங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆகையால், *கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிர் அன்யதா,* "இந்த யுகத்தில் பௌதிக பந்தங்களிலிருந்து விடுபட பகவானின் திருநாமத்தை உச்சரிப்பதைத் தவிர வேறு வழியில்லை."

ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை உச்சரித்தல் என்னும் இந்த எளிய வழிமுறை பகவான் சைதன்ய மஹாபிரபுவால் நமக்கு கொடுக்கப்பட்டது. அவர் இந்த வழிமுறையை புதிதாக கண்டுபிடிக்கவில்லை; அங்கீகரிக்கப்பட்ட வேத இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஹரே கிருஷ்ண உச்சாடனத்தின் மூலமாக, "நாம் யார்? நமது இலக்கு என்ன? நமது மனித வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?" முதலியவற்றை நம்மால் எளிதில் உணர முடியும். இன்றைய விழாவில் யாம் சில சீடர்களுக்கு ஹரி நாம தீக்ஷை வழங்குகிறோம். அதாவது, ஹரே

> "தத்துவ அறிஞர்களும் விஞ்ஞானிகளும் துன்பத்திற்கான உண்மையான காரணத்தை ஆராய்வதில்லை. ஒவ்வொருவரும் துன்பங்களிலிருந்து தப்பிக்க முயல்கின்றனரே தவிர, யாருமே துன்பத்திற்கான உண்மையான காரணத்தை அறிவதற்கு முயல்வதில்லை. உண்மையான காரணம் இந்த உடல்தான்."

கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்ற மந்திரத்தைக் கொடுக்கிறோம். தீக்ஷை என்பது ஆரம்பமே, தீக்ஷை பெற்ற உடனேயே யாரும் பக்குவமடைவதில்லை. கொஞ்சம்கொஞ்சமாக பயிற்சியின் மூலம் பக்குவநிலையை அடைய முடியும்.

## திருமணம் ஒரு தடையல்ல

இன்று நடைபெறும் தீக்ஷை நிகழ்ச்சியுடன் நாங்கள் திருமண விழாவையும் சேர்த்து நிகழ்த்துகிறோம். சந்நியாசியாக இருந்து கொண்டு எனது சீடர்களின் இந்த திருமண விழாவில் நான் கலந்துகொள்வது புதிதாக இருக்கலாம்; சீடர்கள் கவலையின்றி வாழ வேண்டும் என்பதற்காக நான் இவற்றில் ஈடுபடுகிறேன். ஒருவர் ஏக்கத்துடன் இருந்தால், அவரால் கிருஷ்ண உணர்வை முறையாக பயிற்சி செய்ய முடியாது. எனது சீடர்கள் விரும்பினால், வாழ்க்கை முழுவதும் பிரம்மசாரியாக வாழலாம். ஆனால், அஃது அவ்வளவு சுலபம் அல்ல என்பதால், நாங்கள் இந்த திருமண விழாவையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.


கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்வதற்கு திருமணம் ஒரு தடையல்ல. மணமகனும் மணமகளும் வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை மனதிற்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவும்கூட திருமணம் செய்து கொண்டவரே, அவர் இரண்டு முறை திருமணம் செய்து கொண்டார். அவரது முதல் மனைவி இறந்து விட்டதால், அவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். எனவே, திருமணம் என்பது எங்கள் இயக்கத்தின் கொள்கைகளுக்கு எதிரானதல்ல. நரோத்தமதாஸ தாகூர் என்ற சிறந்த வைஷ்ணவ கவிஞர் பாடுகிறார், *க்ரிஹே வா வனேதே டாகே, 'ஹா கௌராங்க' போலே டாகே,* "ஒருவர் கிருஹஸ்தராக இருந்தாலும் சந்நியாசியாக இருந்தாலும், பகவானின் திருநாமத்தை உச்சரிக்க வேண்டும்."

நான் ஒரு சந்நியாசி, ஆனால் எங்கள் இயக்கத்தில் நிறைய கிருஹஸ்தர்களும் உள்ளனர். எனவே, ஒருவன் கண்டிப்பாக துறவு நிலையை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுவதில்லை. அனைவரும் கிருஷ்ண உணர்வில் இருக்க வேண்டும் என்பதே முக்கியம்.

இந்த குறிப்பை மனதில் வைத்து, நாம் நான்கு கட்டுப்பாடுகளைக் கடைபிடித்து வாழ வேண்டும்—தகாத பாலுறவு, மாமிச உணவு, போதைப் பொருட்கள், சூதாட்டம் ஆகியவை கூடாது. அப்போது நம்மால் அமைதியாகவும் ஆனந்தமாகவும் கிருஷ்ண உணர்வைப் பயிற்சி செய்ய முடியும்.

## விவாகரத்து கூடாது

இப்போது இங்கே நிகழும் திருமண விழா பௌதிகப் புலனுகர்ச்சிக்காக அல்ல. இந்த திருமணம் கணவன், மனைவி இருவரும் கிருஷ்ண உணர்வில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்காகவே. கணவன் என்பவன் மனைவிக்கு உதவி செய்ய வேண்டும், மனைவி என்பவள் கணவனுக்கு உதவி செய்ய வேண்டும். அப்போது இருவரும் கிருஷ்ண உணர்வில் முன்னேறி, மனித வாழ்வின் பக்குவநிலையை அடைவர். புலனுகர்ச்சிக்காக ஒருவரையொருவர் பிரிந்து செல்லுதல் அல்லது விவாகரத்து செய்தல் என்ற கேள்விக்கே

இடமில்லை. நவீன நாகரிகத்தில், புலன்களை திருப்தி செய்வதில் ஏதேனும் குறை ஏற்பட்டால், உடனடியாக விவாகரத்து செய்கிறார்கள், அல்லது பிரிந்து விடுகிறார்கள். இங்கே, இதுபோன்ற கேள்விக்கே இடமில்லை.

மணமகனும் மணமகளும் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலையிலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை மனதிற்கொள்ள வேண்டும். அவர்கள் கிருஷ்ண உணர்வில் தங்களது கவனத்தை ஒருநிலைப்படுத்தினால், அவர்களால் ஒன்றாக வாழ முடியும். இல்லையெனில், மாயை பல வழிகளில் தாக்கி, தடைகளை ஏற்படுத்தும். கணவன், மனைவி என இருவருக்கும் கிருஷ்ண உணர்வில் பல கடமைகள் இருக்கின்றன. அக்கடமைகளை அவர்கள் சரியான முறையில் செயல்படுத்தி, கிருஷ்ண உணர்வில் ஈடுபட்டால், அவர்கள் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மகிழ்ச்சியாக வாழலாம். ஆகையால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மகிழ்ச்சியாக இருங்கள்.



## ஹரி நாமம் என்னும் தடுப்பூசி

கிருஷ்ணரை எப்பொழுதும் எவ்வாறு நினைப்பது என்பதைக் கற்றுக் கொடுப்பதற்காகவே இந்த தீக்ஷை நிகழ்ச்சி. ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம. ராம ராம, ஹரே ஹரே என்று உச்சரிப்பதே மிகச்சிறந்த வழியாகும். நாம் கிருஷ்ணரை "ஹரே கிருஷ்ண" உச்சாடனத்தின் மூலமாக நினைப்பதற்கு பயிற்சி செய்ய வேண்டும். அப்பொழுது, நாம் எப்பொழுதும் களங்கமடையாமல் இருப்போம். ஆனால் நீங்கள் கிருஷ்ணரை மறந்தால், களங்கமடைய வாய்ப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக, ஏதேனும் ஒரு தொற்று நோய் பரவுகிறது என்றால், மருத்துவர் தடுப்பூசி போடுவார். லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் "ஹாங்காங் ப்ளூ" என்ற நோய் பரவியபோது, அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொண்டார்கள், நானும் போட்டுக் கொண்டேன். ஆகையால், நான் நோயினால் தாக்கப்படவில்லை.

இந்த முழு உலகமும் "ஹாங்காங் ப்ளூ" நோயினால், அதாவது, மாயையினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகையால், ஹரே கிருஷ்ண உச்சாடனம் என்னும் தடுப்பூசியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். பக்திவினோத தாகூரின் பாடல் ஒன்றில், பகவான் சைதன்ய மஹாபிரபு கூறுகிறார், *ஏனேசி ஔஷதி மாயா நாஷிபாரோ லாகி, ஹரி-நாம மஹா-மந்த்ர லஓ துமி மாகி'*, "மாயை என்ற நோயைக் கொல்ல, நான் ஹரே கிருஷ்ண மந்திரம் என்னும் மருந்தைக் கொண்டு வந்துள்ளேன். எடுத்துக்கொள்ளுங்கள்." மாயையின் தாக்குதலிலிருந்து விடுபடுவதற்கு, இந்த ஹரே கிருஷ்ண உச்சாடனம் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு நமக்கு வழங்கியுள்ள மிகச்சிறந்த வழிமுறையாகும்.

நாம் ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபித்தால், கிருஷ்ணரின் நினைவு தானாக நிகழும். நாம் அதிகமாக ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபிக்கஜபிக்க, நமக்கு கிருஷ்ண உணர்வு கிடைக்கிறது. காலப்போக்கில், "கிருஷ்ண" என்ற வார்த்தையை உச்சரித்த மாத்திரத்தில், நாம் கிருஷ்ணரைக் காண்போம். எனவே, கிருஷ்ண உணர்வை தீவிரமாக புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். உங்கள் தற்போதைய நிலை என்ன என்பது முக்கியமல்ல. கிருஷ்ண உணர்வை உடனடியாக பயிற்சி செய்யுங்கள், வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடையுங்கள்.

(மொழிபெயர்ப்பு: சௌம்ய லக்ஷ்மண தேவி தாஸி)



மீண்டும் எலியாக
மாறு!
ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய உபதேசக் கதை
வேத காலத்திற்கு முன்பு ஓர் அடர்ந்த காட்டில் யோகி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒவ்வொரு நாளும் மரத்தடியில் அமர்ந்து தியானம் செய்வது வழக்கம்.
ஒருநாள் திடீரென்று அவருக்கு முன்பாக ஒரு எலி தோன்றி பேசத் தொடங்கியது.
ஒரு பூனை என்னைத் துரத்துகிறது. காப்பாற்றுங்கள்.
உதவி!!!
அந்த யோகி பல்வேறு வருடங்கள் புரிந்த தவத்தினால், சில விசேஷ சக்திகளைக் கொண்டிருந்தார். தனது பார்வையின் மூலமாக யாரை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் மாற்றும் சக்தி அவரிடம் இருந்தது.
பூனையாக மாறுவாயாக!!!
உடனடியாக.
சிறிய எலியானது பெரிய பூனையாக மாறியது. காட்டுக்குள் மகிழ்ச்சியுடன் சென்றது.


யோகியின் கவனம் சிதறியது. பூனையைப் பார்த்து அவர் கூறினார்.
எலியாக இருந்த உன்னை பூனையாக மாற்றினேன். இப்போது உனக்கு என்ன வேண்டும்?
ஒரு கொடூர நாய் என்னை விரட்டுகிறது
என்னைக் காப்பாற்றுங்கள்!!!
யோகி நினைத்தார்...
என்ன செய்யலாம்? இதையும் அச்சம் தரும் நாயாக மாற்றிவிடலாம்.
யோகி மீண்டும் ஒருமுறை தன்னுடைய கையை உயர்த்தி, எலியாக இருந்து பூனையாக மாறியிருந்த அதனை தற்போது நாயாக மாற்றினார்.
நாயாக மாறு!!!
அந்த நாய் காட்டிற்குள் ஓடியது.
மிகச்சிறந்த யோகியே, கருணை காட்டுங்கள்.
இப்போது என்ன நிகழ்ந்தது?
காட்டில் உள்ள புலி என்னை நாள் முழுவதும் விரட்டுகிறது. நான் ஓடி ஓடிக் களைத்துவிட்டேன்.
புலியாக மாறுவாயாக!!!
நாயைக் கண்டு பரிதாபமடைந்த யோகி மீண்டும் ஒருமுறை வரமளித்தார்.


தற்போது நீ இந்த காட்டிலேயே மிகவும் சக்தி வாய்ந்த மிருகம். உனக்கு மேலும் என்ன வேண்டும்?
யோகியை ஒரு மாதிரியாக பார்த்த புலி.
உங்களை உண்ண விரும்புகிறேன்!!!
நன்றி கெட்ட மிருகமே, மீண்டும் எலியாக மாறு!!!
எலியாக இருந்து, பூனையாக, நாயாக, புலியாக மாறியிருக்கும் அந்த சீவன், மீண்டும் ஓர் அற்புதமான எலியாக மாறியது. எலிக்குரிய சப்தத்தை இட்டபடி காட்டிற்குள் ஓடியது.
நீதி

# மதத்தின் போர்வையில் நாஸ்திகம்

ஸ்ரீ கிரிதாரி தாஸ்



நாஸ்திகம் பல்வேறு போர்வைகளில் மக்களிடையே ஆழமாக புகுந்துள்ளது. பெரும்பாலான மக்கள் இதனை உணர்வதில்லை. ஆழமாகப் பார்க்கும்போது, தங்களை ஆஸ்திகர்கள் என்று கூறிக்கொள்பவர்களில் பலரும்கூட நாஸ்திகர்களாக உள்ளனர். மதத்தின் போர்வையில் நிலவும் அந்த நாஸ்திகத்தை இங்கே வாசகர்களுக்கு அர்ப்பணிக்கின்றோம்.

### மதத்தில் நாஸ்திகமா?

உரிமைகள், மதச்சார்பின்மை ஆகிய போர்வையில் திகழும் நாஸ்திகத்தை ஏற்கனவே யாம் பகவத் தரிசனத்தில் (பிப்ரவரி, மார்ச் இதழ்களில்) விவரித்திருந்தோம். அவை எளிதில் உணரத்தக்கவை. ஆனால் மதத்தில் நாஸ்திகமா? மதமும் நாஸ்திகமும் எதிரெதிர் துருவங்கள். மதத்தைப் பின்பற்றுவோர் நாஸ்திகர்களை நம்புவதில்லை, நாஸ்திகர்கள் மதவாதிகளை நம்புவதில்லை. அவ்வாறு இருக்கையில், மதத்தில் எவ்வாறு நாஸ்திகம் இருக்க முடியும்? தலைப்பே குழப்பமாக உள்ளதே என்று நீங்கள் நினைக்கலாம். ஆம்! தலைப்பை சரியாகவே படித்துள்ளீர். மதத்தின் பெயரிலும் பல்வேறு நாஸ்திக செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தங்களை மதவாதியாக கருதுவோர் பலரும், இக்கட்டுரையினை திறந்த மனதுடன் படித்தால், தங்களிடையே படிந்திருக்கும் நாஸ்திக எண்ணங்களை சிறிதளவேனும் உணர முடியும்.

கலி யுகத்தில் அசுரத் தன்மை ஒவ்வொரு ஜீவனிடமும் உள்ளது என்பதால், நாஸ்திக எண்ணங்கள் அனைவரிடமும் உள்ளன என்பதை நாம் தாழ்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம். எமது பத்திரிகை மதம் சார்ந்த பத்திரிகை என்பதால், இந்த கட்டுரையைப் படிப்பவர்கள் பெரும்பாலும் ஆன்மீக அன்பர்களாகவே இருப்பர். இக்கட்டுரையின் மூலமாக அவர்கள் யாருடைய மனதையும் புண்படுத்துவது எமது நோக்கமல்ல; மாறாக, அவர்கள் ஒவ்வொருவரும் தம்மிடையே படிந்திருக்கும் நாஸ்திக எண்ணங்களை அடையாளம் கண்டு, அதிலிருந்து விடுபட உதவுவதற்காகவே இதனை இங்கே வடித்துள்ளோம்.

### கடவுளை போலியாக வணங்குதல்

**அவநம்பிக்கை:** கடவுள் உள்ளாரா இல்லையா என்பதிலேயே பலருக்கு சந்தேகம். "கடவுள் ஒருவேளை இருந்து விட்டால், ஆபத்தாகி விடுமே! அவரிடமும் சற்று அப்ளிகேஷன் போட்டு வைக்கலாம்," என்ற எண்ணத்துடன் கோயிலுக்குச் செல்வோர் பலர். இவர்கள் வெளிப்படையாக ஆஸ்திகர்களைப் போன்று தோன்றினாலும், உள்ளூர நாஸ்திகர்களாகவே வாழ்கின்றனர். இதில் மற்றொரு வகையினர், வெளியில் தங்களை நாஸ்திகர்களாகக் காட்டிக் கொண்டு, மேலே கூறப்பட்ட அதே எண்ணத்துடன் அவ்வப்போது சில அப்ளிகேஷன் போட்டால் தப்பித்து விடலாம் என்று மறைமுகமாக ஆஸ்திகர்களாக வாழ்கின்றனர். ஆனால் இவர்களும் நாஸ்திகர்களே. முழுமையான நம்பிக்கையின்றி செய்யப்படும் வழிபாடுகள் உரிய பலனைத் தர இயலாதவை.

> “போலி கடவுள்களை வழிபடும் மக்கள் பஜனை செய்யலாம், விரதம் இருக்கலாம், கோயிலுக்குப் போகலாம், வாழ்வையே அர்ப்பணித்து முழு நேரப் பணியில்கூட ஈடுபடலாம்—ஆனால் அப்போதுகூட அவர்கள் நாஸ்திகர்களாகவே கருதப்படுவர்.”

**கௌரவ வழிபாடு:** "ஊரில் இருப்பவர்கள் அனைவரும் கடவுளை வணங்குகின்றனர், நானும் வழிபட வேண்டும், இல்லாவிடில் கௌரவம் கெட்டு விடும், பலர் கேலி செய்யலாம்," முதலிய பல்வேறு சமூக சூழ்நிலைகளின் காரணத்தினால், பலரும் வெளித்தோற்றத்தில் ஆஸ்திகர்களாகவும் உள்ளே நாஸ்திகர்களாகவும் வாழ்கின்றனர். இவர்கள் வெறும் கௌரவத்திற்காக, அல்லது பகட்டிற்காக இறை வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். இவர்களது வழிபாடும் நாஸ்திகமே.

**இரக்கமற்ற இறை வழிபாடு:** இறைவனை வழிபடுகிறோம் என்ற போர்வையில், சிலர் தங்களது இறைவனை மட்டுமே வழிபட வேண்டும், மற்ற இறை வழிபாட்டில் ஈடுபட்டிருப்போர் கொல்லப்பட வேண்டும் என்று நினைக்கின்றனர். உண்மையில் அவர்களிடம் இறைவனைப் பற்றிய அறிவு துளியும் இல்லை என்பதால், அவர்களும் நாஸ்திகர்களாகவே கருதப்பட வேண்டும். வேறு சிலர், "தாழ்ந்த மிருகங்களை இறைவன் எங்களுக்காக படைத்துள்ளார், அவற்றைக் கொன்று திண்போம்," என்ற எண்ணத்தில், மற்ற ஜீவன்களிடம் சிறிதளவும் இரக்கமின்றி செயல்படுகின்றனர். அவர்களும் நாஸ்திகர்களே.

### போலி கடவுள்களை வணங்குதல்

கடவுளைப் போலியாக வணங்குவோர் ஒருபுறமிருக்க, போலி கடவுள்களை வணங்குவோர் இன்று ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகின்றனர். அதுவும் குறிப்பாக, இந்து மதத்தில் அதுபோன்றவர்கள் எண்ணற்றோர். மக்கள் கடவுளிடம் கொண்டுள்ள பக்தியை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி, பணம், செல்வம், புகழ் மற்றும் இதர பௌதிக சுகங்களை அனுபவிக்க விரும்பும் பலர், தங்களையே கடவுளாக அறிவித்து (அல்லது மற்றவர்களால் தங்களை கடவுள் என்று அறிவிக்க வைத்து) மக்களை ஏமாற்றுகின்றனர். முறையான அறிவைப் பெறாத பல்வேறு அப்பாவி மக்கள் ஆஸ்திகம் என்ற பெயரில், அவர்களுடைய வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். இத்தகு மக்கள் பஜனை செய்யலாம், விரதம் இருக்கலாம், கோயிலுக்குப் போகலாம், வாழ்வையே அர்ப்பணித்து முழு நேரப் பணியில்கூட ஈடுபடலாம்—ஆனால் அப்போதுகூட அவர்களுடைய வழிபாடு பிழையாக இருப்பதால், அவர்களும் நாஸ்திகர்களாகவே கருதப்படுகின்றனர்.

பாபாக்கள், அம்மாக்கள், அய்யாக்கள், பரமஹம்சர்கள், குருஜிக்கள் என பல பெயர்களில் இந்த போலி கடவுள்கள் உலாவி வருகின்றனர். இவர்கள் கடவுள்கள் என்பதற்கு எந்தவொரு சாஸ்திர ஆதாரமும் கிடையாது. உண்மையான கடவுளுக்கும் இவர்களுக்கும் துளியும் சம்பந்தமில்லை. ஆனால் ஏதோ உணர்ச்சிவயப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் மனபூர்வமாக அந்த வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். ஆனால், "முதல் கோணல் முற்றிலும் கோணல்" என்பதைப் போல, வெளித்தோற்றத்தில் அவர்கள் மதச் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதைப் போல தோன்றினாலும், அடிப்படை அறிவு இல்லாத காரணத்தினால், நாஸ்திகர்களாகவே கருதப்படுவர்.



வேத சாஸ்திரங்களின் மீது நம்பிக்கையின்றி, அவற்றைப் படிக்காமல் இருப்பவர்கள் நிச்சயம் நாஸ்திகர்களே.

## மனிதனைக் கடவுளாக வணங்குதல்

இந்திய பாரம்பரியத்தில், நம்மை விட பெரியவர்கள் அனைவரும் வழிபாட்டிற்குரியவர்கள்—பெற்றோர்கள், ஆசிரியர்கள், கணவர், வயதில் மூத்தவர்கள், மன்னர்கள், மேலும் பலர். அதுமட்டுமின்றி, நதிகள், மரங்கள், பசுக்கள் என பல இதர ஜீவன்களையும் இதில் சேர்க்கலாம். இவர்கள் கடவுளின் பிரதிநிதியாக செயல்படுவதால், நிச்சயம் நமது வழிபாட்டிற்கு உரியவர்கள், இதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அதே சமயத்தில், "இவர்களுடைய வழிபாடு மட்டுமே போதும், இறைவனை அணுக வேண்டிய அவசியம் எனக்கில்லை. என்னைப் பொறுத்தவரையில் இவர்தான் கடவுள்," என்றெல்லாம் கூறி, மனிதனைக் கடவுளாக வழிபடும் கலாச்சாரம் பெருகி வருகிறது.

இவ்வாறு வழிபடுபவர்களில் பலரும் ஏதேனும் உள்நோக்கத்துடன் அத்தகு வழிபாட்டில் ஈடுபடுவதைக் காண்கிறோம். அரசியல் தலைவரை மகிழ்வித்தால் பதவி கிடைக்கும் என்ற எண்ணத்தில், அந்த தலைவரை கடவுளுக்கு சமமாக, அல்லது கடவுளை விட உயர்ந்தவராக வைத்துப் போற்றுதல், நிச்சயமாக நாஸ்திகத்தின் தாக்கமே. சினிமா நடிகர், நடிகைகளுக்கு கோயில் எழுப்புதல், கிரிக்கெட் வீரரை கடவுள் என்று அழைத்தல், கட்சித் தலைவருக்கு கோயில் எழுப்புதல் போன்றவை அனைத்தும் ஆழ்ந்து யோசித்தால் நாஸ்திகமே என்பது புலப்படும். அதாவது, உண்மையான கடவுளின் மீது நம்பிக்கை இல்லாதிருத்தல் என்பதை அறிய முடியும்.

## சாஸ்திர நம்பிக்கை இல்லாதிருத்தல்

நாஸ்திகன் என்னும் சொல், பொதுவாக கடவுளின் மீது நம்பிக்கை இல்லாதவனைக் குறிக்கிறது. இருப்பினும், உண்மையில், நாஸ்திகன் என்னும் சொல் வேதங்களின் மீது நம்பிக்கை இல்லாதவனைக் குறிப்பதற்கான சொல்லாகும். மனித சமுதாயம் இவ்வுலகில் சிறப்பாக வாழவும் சிறப்பான மறுவாழ்வை எய்தவும் வேத சாஸ்திரங்கள் உதவுகின்றன. ஆனால் யாரேனும் இந்த வேத சாஸ்திரங்களில் நம்பிக்கையின்றி இருந்தால், அந்த நபர் நாஸ்திகன் என்று அழைக்கப்பட வேண்டும். இதன்படி, வேத சாஸ்திரங்களை ஏற்காத இதர மதத்தினரும், வேத சாஸ்திரங்களில் நம்பிக்கை வைக்காத இந்து மதத்தினரும் நாஸ்திகர்களாகவே கருதப்படுகின்றனர்.

வேத சாஸ்திரங்கள் என்பது வேதங்கள், உபநிஷதங்கள், புராணங்கள், இதிகாசம், மற்றும் வேத வழி வந்த இதர நூல்களையும் குறிக்கும். கோயில்களுக்குச் சென்று தங்களை ஆஸ்திகர்களாக அடையாளம் காணும் பலரும்கூட, தற்போதைய நவீன கால விஞ்ஞானம் மற்றும் வாழ்க்கை முறையின் காரணத்தினால், சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள கூற்றுகளை உண்மையென நம்ப மறுக்கின்றனர்.



கடவுள் நிச்சயமாக ஒரு நபர், அருவமானவர் அல்ல. அவரே கிருஷ்ணர்.

இன்றைய மனிதனின் அறிவிற்கு அப்பாற்பட்ட பல விஷயங்கள் சாஸ்திரங்களில் இருக்கின்றன. அவற்றைக் காணும்போது, இவை தனது திறனிற்கு அப்பாற்பட்டவை என்று பணிவுடன் ஏற்பதற்கு பதிலாக, அஹங்காரத்துடன் சாஸ்திரங்கள் சொல்வது எல்லாம் உண்மையல்ல என்று நினைத்து அவற்றை ஒதுக்கி விடுகின்றனர். இவ்வாறு ஒதுக்குதல் நாஸ்திகமாகும்.

சூரிய சந்திர லோகங்கள் உட்பட எல்லா லோகங்களிலும் உயிர்வாழிகள் உள்ளனர், இராமர் கற்களைக் கொண்டு இலங்கைக்கு பாலம் அமைத்தார், மஹாபாரதப் போர்க்களத்தில் நிகழ்ந்த பல்வேறு அசாதாரண சம்பவங்கள், மனித சமுதாயம் சீரும் சிறப்புமாக வாழ்வதற்கு உகந்த சமூக நிலை வர்ணாஷ்ரமமே என்பவை உட்பட பல்வேறு விஷயங்களை நவீன மனிதன் சந்தேகப்படுகிறான். இவன் சாஸ்திரங்களை வெளிப்படையாக நம்பும்போதிலும், முழுமையாக நம்புவதில்லை. கடவுளும் இதர மாமனிதர்களும் நிகழ்த்திய அசாதாரண செயல்கள் எவ்வாறு சாத்தியமாகும் என்று கேள்வி எழுப்புகிறான். இவர்கள் அனைவரும் நாஸ்திகர்களாகவே கருதப்படுகின்றனர். (சாஸ்திரங்களின் மீதான நம்பிக்கைகுறித்து நாம் ஏற்கனவே பல கட்டுரைகளை இயற்றியுள்ளோம்)

## கடவுளை அருவமாக நினைத்தல்

வேத சாஸ்திரங்களை நம்பாதவர்கள் ஒருபுறம் இருக்க, வேத சாஸ்திரங்களை நம்புவதாக கூறிக் கொண்டு, அதே சமயத்தில் வேதங்களில் கொடுக்கப்பட்டுள்ள இறைவனின் வியக்தித்துவத்தை (அதாவது, இறைவன் ஒரு நபர் என்பதை) நம்பாமல், அவருக்கு உருவம் கிடையாது, குணங்கள் கிடையாது, செயல்கள் கிடையாது என்று கூறி, இறைவனின் தனித்தன்மையினை மறுப்பவர்களும் நாஸ்திகர்களாகவே கருதப்பட வேண்டும். குறைந்தபட்சம் அத்தகு மக்களை நாம் மறைமுக நாஸ்திகர்கள் என்று கூறலாம்.

கடவுள் நிச்சயம் ஒரு நபரே, அவருக்கு பௌதிக ரூபங்கள் கிடையாது, பௌதிக குணங்கள் கிடையாது, பௌதிகச் செயல்கள் கிடையாது—அவருடையவை அனைத்தும் தெய்வீகமானவை, ஸச்சிதானந்த தன்மையைக் கொண்டவை. இதை உணராமல் அவருக்கு ரூபமே கிடையாது என்று கூறுதல் முறையன்று. எல்லாவற்றின் ஆதியாகத் திகழும்

அந்த ஒரு பரம்பொருள், கிருஷ்ணர் என்ற பெயரில் வேத சாஸ்திர நிபுணர்களால் அழைக்கப்படுகிறார். அவர் தாமே உகந்து வழங்கிய பகவத் கீதையிலும் தானே முழுமுதற் கடவுள் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெள்ளத்தெளிவாக வழங்கியுள்ளார். ஆயினும், சில மனசாட்சியற்ற நபர்கள் கிருஷ்ணரின் மீதுள்ள பொறாமையினால், அவருடைய உருவத் தன்மையினை மறுத்து பகவத் கீதைக்கு விளக்கமளிக்கின்றனர். இவர்களும் நாஸ்திகர்களாகவே கருதப்படுகின்றனர்.



நாஸ்திகத்தை எதிர்ப்பதால் கேள்விகளைப் புறக்கணிக்கின்றோம் என்பது பொருள் அல்ல. பகவத் கீதை கேள்வி பதில்களால் நிறைந்ததே.

## பூரண நம்பிக்கையுடன் கிருஷ்ணரை வழிபடுவோம்

புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர் அனைவரின் இதயத்திலும் பரமாத்மாவாக வீற்றுள்ளார். ஒவ்வொருவரின் விருப்பு வெறுப்புகளையும் அவர் நன்கறிவார். அவரை யாராலும் ஏமாற்ற முடியாது. மனதில் ஒன்றை வைத்து வெளியில் ஒன்றை வெளிப்படுத்தி, அறியா மக்களை வேண்டுமானால் ஏமாற்றலாம்; ஆனால் முழுமுதற் கடவுளை ஏமாற்ற முடியாது. தனது பக்தனிடம் இருக்கும் எல்லா அனர்த்தங்களையும் (தேவையற்ற எண்ணங்களையும்) முற்றிலுமாக களைபவர் கிருஷ்ணர். அந்த முழுமுதற் கடவுள் கிருஷ்ணரை பக்குவமான அறிவுடன் வழிபடுவதே உண்மையான ஆஸ்திகம், மற்றவை அனைத்தும் நாஸ்திகமே. எனவே, அதற்கான முயற்சியில் ஈடுபடுவோமாக.

கேள்வி எழுப்புதல் என்பதும் அதன் மூலம் சந்தேகங்களைக் களைதல் என்பதும் இயற்கையானதே. நாஸ்திகத்தை எதிர்ப்பதால் நாம் கேள்விகளைப் புறக்கணிப்பதாகவோ நாங்கள் சொல்வதை காரணம் கேட்காமல் நம்ப வேண்டும் என்று வலியுறுத்துவதாகவோ நினைத்து விட வேண்டாம். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு வரும் அனைவரையும் கேள்விகளைக் கேட்டு சந்தேகங்களைக் களைந்துகொள்ளும்படி நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். பகவத் கீதையும்கூட அர்ஜுனனுக்கும் கிருஷ்ணருக்கும் இடையிலான கேள்வி பதிலாகவே அமைந்துள்ளது. ஸ்ரீமத் பாகவதமும் கேள்வி பதிலாகவே அமைந்துள்ளது. முறையான அறிவை தெளிவாகப் பெறுவதற்கு கேள்வி கேட்டல் என்பது அவசியமானதாகும். அவ்வாறு முறையான அறிவினைப் பெற்று படிப்படியாக நமது கிருஷ்ண பக்தியை வளர்க்க வேண்டும். நாஸ்திகத்திலிருந்து முற்றிலுமாக விலகி, பூரண ஆஸ்திகச் செயல்களில் ஈடுபடுவோமாக.

திரு. ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், பகவத் தரிசனம் உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தமிழ் பிரிவில் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.





கோவர்தன லீலைக்குப் பின்னர், இந்திரன் கிருஷ்ணரிடம் மன்னிப்பு வேண்டுதல்

# இராவணன் சீதையைத்

## தீண்டாமல் இருந்ததற்கான காரணம்

அன்னை சீதையைக் கடத்திச் சென்ற இராவணன், சீதைக்கு ஒரு வருட கால அவகாசம் கொடுத்தான் என்பதும், தன்னை ஏற்காவிடில் கண்டம் துண்டமாக வெட்டி காலை சிற்றுண்டி தயாரித்து விடுவேன் என்று மிரட்டினான் என்பதும் உலகம் அறிந்த உண்மை. இராவணன் சீதையை பலவந்தமாக அனுபவிக்க எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. இதனால் சில முட்டாள்கள் இராவணனை உத்தமன் என்றுகூட போற்றுகின்றனர். இராவணனுக்கு ஏதோ சாபம்



இருந்தது என்பதை சிலர் கேட்டிருக்கலாம். அஃது என்ன சாபம், எவ்வாறு யாரிடமிருந்து வந்தது என்பதே இங்குள்ள தெரியாத துணுக்கு.

ஒருமுறை இராவணன் கைலாய மலையில் தங்கி தேவ லோகத்தைத் தாக்குவதற்கு ஆயத்தமாக இருந்த சமயத்தில், அப்சர பெண்களில் ஒருத்தியான ரம்பை அவனுடைய கண்களில் பட்டாள். இராவணன் ரம்பையினால் கவரப்பட்டு அவளை அனுபவிப்பதற்காக பேச்சு கொடுத்தான். இராவணனை தனது மாமனார் என்று அழைத்த ரம்பை, அவனுடைய ஆசைக்கு இணங்க மறுத்தாள். (குபேரனும் இராவணனும் சகோதரர்கள், குபேரனின் மகனான நளகூவரனும் ரம்பையும் உறவில் இருந்ததால், இராவணன் ரம்பைக்கு மாமனார் முறையாகும்.) ஆயினும், அப்சரப் பெண்களுக்கு அதுபோன்ற விதிகள் ஏதுமில்லை என்று கூறி, ரம்பையை பலாத்காரம் செய்தான் இராவணன்.

அதன் பின்னர், அச்சமும் நடுக்கமும் கொண்ட ரம்பை, நளகூவரனிடம் சென்று அவனது பாதங்களில் விழுந்து மன்னிப்பை வேண்டினாள். தனது தியானத்தினால் இராவணனின் பலாத்காரச் செயலை அறிந்து கொண்ட நளகூவரன், உடனடியாக இராவணனுக்கு பின்வருமாறு சாபமிட்டான். "இராவணன் இனிமேல் விருப்பமில்லாத பெண்ணை பலாத்காரம் செய்வானேயானால், அவனுடைய தலை ஏழு துண்டுகளாக போகக் கடவது." நளகூவரனின் சாபத்தைக் கேட்டு எல்லா தேவர்களும் குடும்பப் பெண்களும் மகிழ்ச்சியுற்றனர். இராவணனோ உரோமச் சிலிர்ப்பை உண்டாக்கும் பயங்கரமான சாபத்தைக் கேட்ட பின்னர், தன்னை விரும்பாத பெண்களிடம் பலவந்தமாக உறவுகொள்வதை அறவே தவிர்த்தான்.

**ஆதாரம்: வால்மீகி இராமாயணம், உத்தர காண்டம், ஸர்க்கம் 26**

**பின்குறிப்பு:** அதே நளகூவரனுடன் நிகழ்ந்த கிருஷ்ண லீலையை பக்தர்கள் தினம்தினம் நினைத்துப் பார்க்கும் இந்த தாமோதர மாதத்தில் (13 நவம்பரில் முடிகிறது), நளகூவரன் இராவணனுக்கு வழங்கிய சாபமும் ஒரு நினைவாக இருக்கட்டுமே!

# உங்களின் வரிகளும் கேள்விகளும்

### குறளின் குரல், ஒரு கலங்கரை விளக்கம்

வணக்கம், "பகவத் தரிசனம்" இதழை தரிசித்து அமைதியடைந்தேன்! தயாள கோவிந்த தாஸ் அவர்கள் வழங்கும் "குறளின் குரல்" கட்டுரை (திருக்குறளின் வழியாக பகவத் கீதை ஞானம்) மிகச் சிறப்பாகவும் கருத்தாழமிக்கதாகவும் பக்தர்களுக்கு கலங்கரை விளக்கமாகவும் திகழ்கின்றது, நன்றி!!

—ஜி. சுப்பையயன், திருவனந்தபுரம், கேரளா.



### ஆத்ம திருப்தியடைகிறேன்

பகவத் தரிசனத்தைப் படிப்பதால் ஆத்ம திருப்தி ஏற்படுகிறது. குசேலருக்கு மறைமுகமாக செல்வம் வழங்கியது ஏன்? என்ற கட்டுரையை படித்தேன், அருமையாக இருந்தது.

—மணிகண்டன், சேலம்

### எந்த பெயரைச் சொன்னாலும் ஒன்றுதானா?

எல்லாப் பாதைகளும் ஒரே இலக்கை அடைகின்றனவா என்பது குறித்த கட்டுரையைப் படித்தேன். இதற்கு முன்பு நான் இஸ்கானில் கேள்விப்பட்டது என்னவெனில், எந்த மதத்தை நாம் பின்பற்றுகிறோம் என்பது முக்கியமல்ல, கடவுளின் பெயரை கிருஷ்ணர் என்றோ அல்லா என்றோ ஜகோவா என்றோ உண்மையுடன் உச்சரித்தால், அந்த நபர் இறையன்பினை வளர்த்து இறைவனின் திருநாட்டிற்குச் செல்ல முடியும். தற்போது உங்களின் கட்டுரையைப் படித்து நான் சற்று குழம்பியுள்ளேன். உங்களுடைய கட்டுரையும் இஸ்கானில் நான் கேள்விப்பட்டதும் முரண்பாடானதா? அல்லது என்னுடைய புரிந்துணர்வு தவறாக உள்ளதா? தயவுசெய்து தெளிவுபடுத்துங்கள்.

—ராஜேந்திர பாபு, சென்னை.

**எமது பதில்:** திருநாமங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை, கலி யுகத்தில் பௌதிக வாழ்விலிருந்து விடுபட திருநாமங்களை உச்சரிப்பது மட்டுமே வழி. இதில் எந்த சந்தேகமும் இல்லை. இருப்பினும், பகவானின் திருநாமங்களில் இரு வகை உண்டு: முக்கிய நாமங்கள் (நேரடி பெயர்கள்), இரண்டாம் நிலை நாமங்கள் (மறைமுக பெயர்கள்). கடவுளின் முக்கிய நாமங்களை (கிருஷ்ணர், கோவிந்தர், மாதவர் போன்றவற்றை) உச்சரிப்பதால், நாம் இறையன்பினை வளர்த்து பகவானின் இருப்பிடத்திற்குச் செல்ல முடியும். அவரது இரண்டாம் நிலை பெயர்களை (கடவுள், அல்லா, ஈஸ்வர, ஜகோவா போன்றவற்றை) உச்சரிப்பதால், அதிகபட்சம் முக்தியை (ஜட வாழ்வின் துயரங்களிலிருந்து விடுதலை) மட்டும் பெற முடியும். அந்த முக்தியிலும்கூட வேறுபாடுகள் உள்ளன. எனவே, அனைத்தையும் சமம் என்று கூறிவிட முடியாது.

மேலும், பகவானின் திருநாட்டிற்குச் செல்ல விரும்புபவன் தவிர்க்க வேண்டிய குற்றங்கள் பல உள்ளன. அந்த குற்றங்களிலிருந்து விடுபட பக்குவமான அறிவு தேவை. பெரும்பாலான மக்களிடம் கடவுள்

என்றால் என்ன, கடவுள் யார் போன்ற அடிப்படை அறிவுகூட இல்லை. அவ்வாறு அறியாமையில் நாமத்தை உச்சரிப்பதால் ஒருவரால் விரும்பிய பலனை அடைய முடியாது.

ஆம். ஒருவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அது பொருட்டல்ல என்பதை நாங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறோம். ஏனெனில், மதம் என்பது வெளிப்புற அடையாளமே. திருநாம கீர்த்தனம் என்பதே முக்திக்கான வழிமுறை, அது மட்டுமே கலி யுகத்தில் சாத்தியமானது. தங்களது மத அடையாளத்தின் காரணமாக கிருஷ்ணரின் திருநாமத்தை (நேரடி பெயரை) உச்சரிக்கத் தயங்குபவர்கள் நிச்சயமாக அவரது இரண்டாம் நிலை நாமத்தை உச்சரித்தல் சிறந்தது என்பதால், சில நேரங்களில் நாங்கள் அந்த நாமங்களை உச்சரிப்பதைப் பற்றியும் பேசுகிறோம். ஆனால் எல்லாம் ஒன்றுதான் என்று நிச்சயமாக யாரும் கூறியிருக்க மாட்டார்கள்.

தாங்கள் படித்த கட்டுரையில் நாங்கள் பல்வேறு வழிமுறைகளைப் பற்றி விவாதித்துள்ளோம், வெளிப்புற மத அடையாளங்களை அல்ல. பகவானின் நாமத்தைச் சொல்வதே வழி என்றபோதிலும், அதிலும்கூட வெவ்வேறு வகையான நாம உச்சாடனங்கள் வெவ்வேறு இலக்கினையே வழங்கும். எனவே, முறையான அறிவை வளர்த்துக் கொண்டு நாமத்தைச் சொல்வதால் மட்டுமே பக்குவமான விளைவினை அடைய முடியும்.

## மௌன விரதத்தின் உண்மை நிலை

அக்டோபர் மாத பகவத் தரிசனம் கண்டேன், மிகவும் பரவசம் அடைந்தேன். பக்தனின் வாக்கைக் காப்பாற்றும் பகவான், அஜாமிளன் படக்கதை, நடுப்பக்கம், குசேலருக்கு வழங்கிய மறைமுக செல்வம், தற்கொலை ஒரு தீர்வா? காலம் தாழ்த்தாமல் இன்றே இப்போதே பகவத் கீதை படியுங்கள், என அனைத்து கட்டுரைகளும் அருமையாக இருந்தது. மிகவும் நன்றி.

என்னுடைய கேள்வி: ஒருநாள், ஒரு வாரம், ஒரு மாதம் என பலர் மௌனம் இருக்கிறார்கள், மௌனத்தின் உண்மை நிலை என்ன?

—ச. கோட்டைமுத்து, பாளையங்கோட்டை மத்திய சிறை

> **“மௌனமாக இருத்தல் என்பதை “ஒன்றும் பேசாமல் இருத்தல்” என்று நாம் நினைத்து விடக் கூடாது. மௌனமாக இருத்தல் என்றால், “பௌதிக விஷயங்களைப் பேசாமல் இருத்தல்,” என்றும், “ஆன்மீக விஷயங்களை மட்டும் பேசுதல்” என்றும் பொருள்படும்.”**

**எமது பதில்:** பேசிக் கொண்டேயிருத்தல் என்பது ஆன்மீக வாழ்க்கைக்கு நல்லதல்ல என்பதால், அதுபோன்று பேசாமல், மௌன விரதத்தை அனுசரித்தல் என்பது பொதுவாக பரிந்துரைக்கப்படும் ஒன்றாகும். ஸ்ரீல பிரபுபாதர் தனது பகவத் கீதையின் உரையில் (10.38), “மௌனத்தினால் ஒருவன் விரைவாக முன்னேற்றம் பெறலாம் என்பதால், மௌனம் மிக முக்கியமானது,” என்று கருத்து தெரிவிக்கின்றார்.

அதே நேரத்தில், மௌனமாக இருத்தல் என்பதை “ஒன்றும் பேசாமல் இருத்தல்” என்று நாம் நினைத்து விடக் கூடாது. மௌனமாக இருத்தல் என்றால், “பௌதிக விஷயங்களைப் பேசாமல் இருத்தல்,” என்றும், “ஆன்மீக விஷயங்களை மட்டும் பேசுதல்” என்றும் பொருள்படும். ஸ்ரீல பிரபுபாதர் தனது பகவத் கீதையின் உரையில் (12.18–19) பின்வருமாறு இதனைத் தெளிவாக விளக்குகிறார்: “கிருஷ்ணருடைய விஷயங்களைத் தவிர வேறு எதையும் அவன் (பக்தன்) பேசுவதில்லை; எனவே, அவன் மௌனமானவன் என்று கூறப்படுகின்றான். மௌனம் என்றால் பேசக் கூடாது என்று அர்த்தம் அல்ல; மௌனம் என்றால் அபத்தமானவற்றைப் பேசக் கூடாது என்றே அர்த்தம். தேவையானவற்றை மட்டுமே பேச வேண்டும், முழுமுதற் கடவுளின் திருப்திக்காக பேசப்படும் பேச்சு பக்தனுக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும்.”

எனவே, கிருஷ்ண பக்தர்கள் எப்போதும் கிருஷ்ணரைப் பற்றி மட்டும் பேசி, மௌன விரதத்தை பக்குவமாக அனுசரிக்கின்றனர்.

## கிறிஸ்துவர்கள் இந்துக் கடவுள்களை ஏன் நம்புவதில்லை?

இயேசு கிறிஸ்துவை இந்த உலகிற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அனுப்பியுள்ளார் என்பதை நாம் ஆணித்தரமாக நம்புகிறோம். ஆனால் கிறிஸ்துவர்கள் இந்துக் கடவுள்களை நம்புவதில்லை. மேலும், நம்முடைய திருவிழாக்களில் அவர்கள் பிரசாதம் ஏற்பதில்லை. தயவுசெய்து விளக்கமளியுங்கள்.

—பி. விநாயகம், சென்னை.

**எமது பதில்:** அனைவருடைய நம்பிக்கையும் சாஸ்திரத்தின் அடிப்படையில் விஞ்ஞானபூர்வமான நம்பிக்கையாக இருக்க வேண்டும், வெறும் குருட்டு நம்பிக்கையாக இருக்கக் கூடாது. ஆன்மீக விஷயங்களை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அறிவுப்பூர்வமாக அணுகுவதில்லை என்பதும் வெறும் மனவெழுச்சியில் அணுகுகின்றனர் என்பதும் துரதிர்ஷ்டமான வருந்தத்தக்க உண்மை. ஒருவருடைய நம்பிக்கை எப்போது அறிவுபூர்வமாக இல்லையோ, அப்போது நிச்சயம் அவர்கள் மத வெறியர்களாக அல்லது உணர்ச்சிவசப்படுபவர்களாகவே இருப்பர்.



மேலும், அவர்கள் நம்புவதாலோ நம்பாமல் இருப்பதாலோ, உண்மை என்றும் மாறி விடாது. இந்தியாவின் தற்போதைய பிரதமர் திரு. நரேந்திர மோடி என்பதை சிலர் நம்பாமல்கூட இருக்கலாம். ஆனால் அவர்களின் நம்பிக்கையோ அவநம்பிக்கையோ அதனை நிச்சயம் மாற்றி விடாது. அதுபோலவே, ஆன்மீக விஷயங்களும் மற்றவர்களின் நம்பிக்கையினால் மாற்றம் பெறாது. உண்மை என்றும் உண்மையாகவே இருக்கும்.

## உயிர் பலியை ஏற்கலாமா?

ஆன்மீகம் உயிர் பலி தந்து வழிபடுவதை ஏற்றுக்கொள்கிறதா? விளக்கம் தரவும்.

—சே. கிருஷ்ண மூர்த்தி, திண்டுக்கல்

**எமது பதில்:** ஆன்மீகத்தில் பல நிலைகள் உள்ளன. வைஷ்ணவ தர்மத்தைப் பின்பற்றுவோர் எவரும் ஒருபோதும் உயிர் பலியை ஏற்பதில்லை. வைஷ்ணவ வழிபாடு மிகவுயர்ந்த தூய ஸத்வ குணத்தில் ஆற்றப்படுகிறது. ஆயினும், தாழ்ந்த குணத்திலுள்ள மக்களும் ஏதாவது ஒரு விதத்தில் இறையுணர்வுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்பதற்காக, வேத சாஸ்திரங்களின் சில பகுதிகளில் மிருக பலி என்பது கூறப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு குறிப்பிட்ட மிருகம் (பெரும்பாலும் ஆடு, கோழி போன்ற மிருகங்கள்) ஒரு குறிப்பிட்ட நாளில் பலி கொடுக்கப்படுகிறது. அதன் மூலம், மாமிசம் உண்ண விரும்பும் தாழ்ந்த நிலை மனிதர்கள் ஒரு கட்டுப்பாட்டில் வைக்கப்படுகின்றனர். சாஸ்திரங்களின் உண்மையான அறிவுரை, மாமிச உணவினை முற்றிலுமாக புறக்கணித்தலே. ஆனால் அவ்வாறு செய்ய முடியாதவர்கள், இதுபோன்று பலி கொடுத்து உண்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அதன் மூலம், மாதம் ஒருமுறை மட்டுமே மாமிசம் உண்ணுதல் என்னும் நிலைக்கு அவர்கள் வருவர். மேலும், அங்கே பலி கொடுப்பதற்கான முறையும் பலி கொடுப்பவர்களை படிப்படியாக அச்செயலிலிருந்து விடுவிப்பதற்கு உரித்தானதாகும்.

*மாம் ஸ பக்ஷயிதாமுத்ர*
*யஸ்ய மாம்ஸாம் இஹாத்ம்யஹம்*

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்)

# இறையருள்

தயாள கோவிந்த தாஸ்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசித்த பகவத் கீதையின் உண்மைகளை தெய்வப் புலவர் திருக்குறளில் கூறியிருப்பது திருக்குறளின் பல பெருமைகளுள் தலையாய பெருமையாகும்.

வாழும் வழிமுறை, அறநெறி, ஒழுக்கத்தின் உயர்வு, தன்னுணர்வு, இறையுணர்வு ஆகியவற்றை விளக்கும் திருக்குறளின் பார்வையிலிருந்து, இறைத் தொண்டையும் பக்தியையும் விளக்கியுரைக்கும் ஓர் எளிய முயற்சியே "குறளின் குரல்" என்னும் பகுதியாகும். பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள கருத்துகள் (அல்லது தத்துவங்கள்) திருக்குறளின் மூலமாக இங்கு விளக்கப்படுகிறது.



இறையருள் அல்லது இறையன்பு என்பதுதான் மனித வாழ்வின் உயர்ந்த நோக்கமாக இருக்க வேண்டும்.

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

"செல்வங்களுள் சிறந்த செல்வம் அருளாகிய செல்வமே. பொருளாகிய செல்வங்கள் இழிந்தவர்களிடத்திலும் உள்ளன." (திருக்குறள் 241)

அறம் அல்லது தர்மத்தின் வழி நின்றால்தான் இறையருள் அல்லது இறையன்பினைப் பெற முடியும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதர் அவர்கள் பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் போதனைகளின் அடிப்படையில், வாழ்வின் நோக்கம் முழுமுதற் கடவுளாகிய கிருஷ்ணரிடம் அன்பு செலுத்துதல் மற்றும் அன்பைப் பெறுதல் என்று விளக்கியுள்ளார்.

முழுமுதற் கடவுளிடம் அன்பு செலுத்தும்போது, அவரின் படைப்பான பிற உயிர்களிடம் அன்பு செலுத்துதல் தானாக அமையும். வேருக்கு நீரூற்றினால் மரத்தின் எல்லாப் பகுதிகளும் நலம் பெறும் என்பதுபோல.

அருளுடைமையின் முக்கியத்துவத்தை வள்ளுவர்,

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

"அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் வாழும் வாழ்க்கை அருள் பொருந்திய நெஞ்சம் உடையோருக்கு இல்லை." (திருக்குறள் 243)

இங்கே, "துன்பமான இருள் பொருந்திய உலகம்" என்று வள்ளுவர் குறிப்பிடுவதைக் காண்க. இதிலிருந்து ஒளிபொருந்திய இன்பமான உலகம் மற்றொன்று இருப்பதை அவர் சுட்டிக் காட்டுகின்றார். பகவான் சைதன்ய மஹாபிரபுவின் நோக்கமும் நம்மை ஒளி

மிகுந்த இனிய உலகமான கிருஷ்ண உலகிற்கு அல்லது கோலோக விருந்தாவனத்திற்கு அழைத்துச் செல்வதுதான்.

**பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு**

“பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு சிறப்பாகக் கருதப்படுகின்ற செம்பொருளாகிய உண்மைப் பொருளை (இறைவனை) காண்பதே அறிவாகும்.” (திருக்குறள் 358)

வள்ளுவரின் இந்தக் கூற்றினை, பகவத் கீதையின் (4.9) கீழ்க்காணும் கூற்றுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஜன்ம கர்ம ச மே திவ்யம்
ஏவம் யோ வேத்தி தத்த்வத:
த்யக்த்வா தேஹம் புனர் ஜன்ம
நைதி மாம் ஏதி ஸோ ’ர்ஜுன

“எனது தோற்றமும் செயல்களும் திவ்யமானவை என்பதை எவனொருவன் அறிகின்றானோ, அவன் இந்த உடலைவிட்ட பின் மீண்டும் இப்பௌதிக உலகில் பிறவி எடுப்பதில்லை. அர்ஜுனா, அவன் எனது நித்திய உலகை அடைகிறான்.”

மேலும், அறிவு என்பது, இயற்கையையும் அதை அறிபவர்களான ஆத்மாவையும் இறைவனையும் அறிவதே என்று பகவத் கீதையில் (13.3) கிருஷ்ணர் கூறுகின்றார். இதுவே உண்மையான பகுத்தறிவாகும்.

*தயாள கோவிந்த தாஸ் M.Tech., Ph.D. அவர்கள், ஸ்ரீரங்கத்தில் கிருஷ்ண பக்தியைக் கடந்த முப்பது ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.*

---

## உங்களின் வரிகளும் கேள்விகளும்

(23ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

“எந்த மிருகத்தின் சதையினை நான் தற்போது உண்கிறேனோ, அந்த மிருகம் மறுபிறவியில் என்னை உண்ணட்டும்,” இந்த ஒரு மந்திரத்துடன் (ஒப்பந்தத்துடன்) செய்யப்படுவதே முறையான மிருக பலி என்பது. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறி விட்டது. அவ்வப்போது நினைத்த நேரத்தில் கடையில் சென்று மாமிசம் சாப்பிடுபவர்கள், கோயிலுக்குச் சென்று அங்கும் பலி கொடுக்கின்றனர். என்ன கொடுமை!

### வர்ணாஷ்ரமத்தை எவ்வாறு பின்பற்றுவது?

நாம் எந்த வர்ணாஷ்ரமத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாதபோது, எப்படி வர்ணாஷ்ரமத்தை பின்பற்ற முடியும்?

—பகவத் சிங், நாகர்கோயில்.

**எமது பதில்:** இது கடினமல்ல. ஆனால் அதே சமயத்தில் இதனை ஒரே நாளிலும் முடிவு செய்து விட முடியாது. கலி யுகத்தில் வர்ணாஷ்ரம தர்மத்தை முழுமையாகக் கொண்டு வருதல் சாத்தியமல்ல என்றபோதிலும், நம்மால் முடிந்த வரை அதன் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் கூறியுள்ளார். அதன்படி, வர்ணாஷ்ரம நடைமுறை படிப்படியாக நிறுவப்பட வேண்டும். வர்ணாஷ்ரமம் என்னும் உடலிற்கு தலையாக இருப்பது பிராமணர்கள் என்பதால், ஸ்ரீல பிரபுபாதர் முதலில் பிராமண சமுதாயத்தை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

மேலும், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட எளிய வாழ்க்கை, பசு பராமரிப்பு, குருகுலக் கல்வி ஆகியவை வர்ணாஷ்ரமத்தை அமைப்பதற்கான அடிப்படை விஷயங்களாகும். அதனை நாம் செவ்வனே நிறைவேற்றும்போது, படிப்படியாக நம்மால் வர்ணாஷ்ரமத்தை மனித சமுதாயத்தில் மீண்டும் நிலைநாட்டி, அதன் மூலம் கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்வதற்கான சாதகமான சூழ்நிலையினை நிச்சயம் மக்களுக்கு வழங்க முடியும்.

பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் (தபால், மின்னஞ்சல், வாட்ஸ்–அப் மூலமாக) தெரிவிக்கவும்.

வாட்ஸ்–அப்
95434 82175

# இராமானுஜரின்
## வழியில் சமூக சீர்திருத்தத்தில் ஈடுபடும் இஸ்கான்

### —கலைஞர் கருணாநிதியிடம் தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி

கலைஞர் தொலைக்காட்சியில் இராமானுஜரைப் பற்றிய நாடகம் சிறப்பாக ஒளிபரப்பப்பட்டு வருவது அனைவரும் அறிந்த விஷயம். அக்டோபர் 5, 2016 அன்று இஸ்கான் இயக்கத்தின் மூத்த சந்நியாசிகளில் ஒருவரான தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி அவர்கள், தமிழக முன்னாள் முதல்வர் திரு. கலைஞர் கருணாநிதி அவர்களைச் சந்தித்து இராமானுஜரையும் வைஷ்ணவ சித்தாந்தத்தையும் பரப்பும் இந்த நாடகத்திற்காக நன்றி தெரிவித்தார். வைஷ்ணவ தர்மத்தின் உலகளாவிய சகோதரத்துவம், இராமானுஜரின் பெருமைகளை உலகெங்கிலும் எடுத்துரைப்பதில் ஸ்ரீல பிரபுபாதர் மற்றும் இஸ்கானின் முக்கிய பங்கு ஆகியவற்றையும் எடுத்துரைத்தார்.

தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி அவர்கள் ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்கள் பலவற்றையும் கலைஞர் அவர்களுக்கு பரிசளித்தார். அவர்களுடைய உரையாடலின் மொழிபெயர்ப்பு இங்கே.

**ஸ்வாமி:** இராமானுஜரின் செல்வாக்கு ஆயிரம் வருடங்களைக் கடந்தும் தொடர்ந்து பரவி வருகிறது. நாங்களும் (இஸ்கான் அமைப்பினரும்) அந்த ஆன்மீக சமுதாய ஒற்றுமையினை தெளிவான புரிந்துணர்வுடன் புதுப்பிப்பதற்கு முயற்சி செய்து வருகிறோம். ஆன்மீக ரீதியில் பார்த்தால், நாம் அனைவரும் முழுமுதற் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தவர்கள், இதில் தங்களுக்கு மாற்றுக் கருத்து இருக்கலாம். ஆயினும், நாம் அனைவரும் உயர்ந்த சக்தியின் கீழ் உள்ளோம் என்பது ஒற்றுமையை போதிக்கும் மாபெரும் தத்துவமாகும். மதம் என்பது பல வழிகளில் தவறாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம். நாங்கள் அதனை இராமானுஜர் செய்ததைப் போலவே தூய வடிவில் வழங்க விரும்புகிறோம். இராமானுஜரின் மீது தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்தமைக்கு நன்றி.

**கலைஞர்:** இராமானுஜர் ஒரு மிகப்பெரிய மகான், அவரை இன்றும் மக்கள் வழிபடுகிறார்கள். அதனால்தான், நான் இந்த நாடகத்தை வழங்குவதற்கு முனைந்தேன்.

**ஸ்வாமி:** ஆம், அவர் மிகப்பெரிய மகான். நான் தமிழகத்தின் பல்வேறு திவ்ய தேசங்களுக்குச் சென்றுள்ளேன். அங்கு சென்று இராமானுஜரின்



முன்பு தலைவணங்குவதில் நான் மாபெரும் இன்பமடைகிறேன். இன்று ஹரே கிருஷ்ண இயக்கத்தின் மூலமாக இராமானுஜர் உலகெங்கிலும் அறியப்பட்டுள்ளார். அது மட்டுமின்றி, உலகெங்கிலும் உள்ள எங்களது பக்தர்கள் இராமானுஜரின் மீதான மாபெரும் மரியாதையினால், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம் முதலிய இடங்களுக்கு யாத்திரையாக வருகின்றனர். இராமானுஜர் மற்றவர்களின் நன்மைக்காகவே வாழ்ந்தார். மக்கள் தங்களது வாழ்வை சிறந்த முறையில் பக்குவப்படுத்திக்கொள்வதற்கு அவர் ஆன்மீக வழிகாட்டுதலை வழங்கினார்.

இந்தியாவின் உண்மையான ஆன்மீகப் பண்பாட்டினால் உலகின் எல்லா பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்பதில் நான் பூரண நம்பிக்கைக் கொண்டுள்ளேன். இராமானுஜர் மற்றும் இதர ஆச்சாரியர்களின் போதனைகளை முறையாக செயல்படுத்தாத காரணத்தினால்தான், உலகில் இன்று எல்லா இடங்களிலும் சமுதாய வேற்றுமைகள், வஞ்சித்தல், ஏமாற்றுதல் போன்றவை நிகழ்கின்றன. சில மக்கள் அவர்களின் போதனைகளை தவறாக உபயோகிக்கின்றனர், சிலர் அவற்றைப் புறக்கணிக் கின்றனர். ஆனால் அவர்களின் போதனைகள் தூய்மையானவை, பக்குவமானவை. எங்களின் குரு ஸ்ரீல பிரபுபாதர் அதே செய்தியினை முழு உலகிற்கும் கொண்டு வந்தார். மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மையான செய்தியினைப் பரப்புவதற்கு உதவி செய்வதால், உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

> “ஆச்சாரியர்களின் போதனைகளை முறையாக செயல்படுத்தாத காரணத்தினால்தான், உலகில் இன்று எல்லா இடங்களிலும் சமுதாய வேற்றுமைகள், வஞ்சித்தல், ஏமாற்றுதல் போன்றவை நிகழ்கின்றன. சில மக்கள் அவர்களின் போதனைகளை தவறாக உபயோகிக்கின்றனர், சிலர் அவற்றைப் புறக்கணிக்கின்றனர்.”

எங்களுக்கு ஏதேனும் தகவல் சொல்ல விரும்புகிறீர்களா?

**கலைஞர்:** தொண்டை பிரச்சனை இருப்பதால், சரியாக பேச முடியவில்லை.

**ஸ்வாமி:** (அருகில் நின்ற பக்தரை அறிமுகம் செய்து வைத்து) இவர் கிருஷ்ண தாஸ், இஸ்கான் தமிழ்நாட்டின் சிறந்த ஆன்மீக தலைவர்களில் ஒருவர். சராசரி மக்கள் எதனை மிகவும் தாழ்ந்த ஜாதி என்று கூறுவார்களோ, அந்த ஜாதியிலிருந்து வந்தவர் இவர். நாங்கள் ஜாதியின் அடிப்படையில் எந்தப் பாகுபாடும் பார்ப்பதில்லை. இதில் நாங்கள் உங்களுடன் ஒத்து வருகிறோம். ஜாதி அமைப்பு வெறும் பிறப்பினால் மட்டுமே என்பது மாபெரும் தவறான புரிந்துணர்வாகும். உண்மையான ஜாதி முறை தகுதிகளின் அடிப்படையிலானது, நாங்கள் இதனை வெளிப்படுத்தி வருகிறோம். எனவே, எல்லா ஜாதியைச் சார்ந்தவர்களும் எங்களது கோயில்களில் பூஜாரிகளாக பிரச்சாரகர்களாக உள்ளனர். ஜாதிப் பாகுபாடு ஏதும் கிடையாது. இராமானுஜரும் அதனை போதித்துள்ளார். நீங்கள் அதனை நன்கு அறிவீர். அவர் ஆன்மீகத் தளத்திலிருந்து சமுதாய சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர். தங்களது பௌதிகத் தேவைகள் பூர்த்தியடைவதால் மட்டும் மக்களால் திருப்தியடைய முடியாது, ஆன்மீக வாழ்வும் அவசியம்.

நீங்கள் புத்தகங்களை அதிகம் விரும்புபவர் என்பதால், உங்களுக்காக சில புத்தகங்கள். தங்களது நேரத்தை ஒதுக்கியமைக்கு மிக்க நன்றி.

**இந்த சந்திப்பில், இஸ்கான் சேலத்தைச் சார்ந்த திரு. கிருஷ்ண தாஸ், இராமானுஜர் தொடரின் தயாரிப்பாளர் திருமதி. குட்டி பத்மினி, அத்தொடரின் இயக்குநர் திரு. தனுஷ் (தாமோதர கௌராங்க தாஸ்) உட்பட இதர சில பக்தர்களும் கலந்து கொண்டனர்.**

**பின் குறிப்பு:** கலைஞர் கருணாநிதி அவர்களின் பல்வேறு செயல்களினால், இந்து மத பிரியர்கள் சிலர், இஸ்கான் பக்தர்கள் கலைஞர் கருணாநிதி அவர்களை ஏன் சந்திக்க வேண்டும் என்று நினைக்கலாம். இங்கே நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், நற்செயலை யார் செய்தாலும், அதனைப் பாராட்டுவது நமது மரபு. மேலும், ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களின் மூலமாக யார் வேண்டுமானாலும் இதயத்தில் மாற்றத்தைப் பெற முடியும். எனவே, அதற்கான ஒரு சிறு முயற்சியே இந்த சந்திப்பு.

ஸ்ரீமத் பாகவத சுருக்கம்

# ஜட இயற்கையைப் புரிந்துகொள்ளுதல்

**வனமாலி கோபால தாஸ்**



அனைத்து வேதங்களையும் தொகுத்த ஸ்ரீல வியாஸதேவர், அவற்றின் தெளிவான சாராம்சத்தை ஸ்ரீமத் பாகவதத்தின் வடிவத்தில் நமக்கு வழங்கியுள்ளார். "வேத இலக்கியம் எனும் மரத்தின் கனிந்த பழம்" என்று அழைக்கப்படும் இந்த ஸ்ரீமத் பாகவதம் வேத ஞானத்தின் மிகவும் பூரணமான அதிகாரபூர்வமான விளக்கமாகும். இதன் 18,000 ஸ்லோகங்கள் 12 ஸ்கந்தங்களாக விரிந்துள்ளன.

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் தமது ஆழ்ந்த புலமையாலும் பக்தி மயமான முயற்சிகளாலும் இன்றைய நடைமுறைக்கு ஏற்ற தமது விரிவான விளக்கவுரைகளுடன் பக்தி ரசமூட்டும் ஸ்ரீமத் பாகவதத்தினை நவீன உலகிற்கு வழங்கிப் பேருபகாரம் செய்துள்ளார். அவரது அற்புதமான படைப்பின் ஒரு சுருக்கத்தை இங்கு பகவத் தரிசன வாசகர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வருகிறோம். இதன் பூரண பலனைப் பெற ஸ்ரீல பிரபுபாதரின் ஸ்ரீமத் பாகவதத்தை இத்துடன் இணைத்து கவனமாகப் படிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

**இந்த இதழில்: மூன்றாம் ஸ்கந்தம், இருபத்தேழாம் அத்தியாயம்**

---

சென்ற இதழில் ஜட இயற்கையின் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய கபிலரின் விளக்கங்களை அறிந்தோம். இந்த இதழில் உலக இயல்பு மற்றும் பக்தித் தொண்டில் கபிலரின் அறிவுரைகளைக் காணவிருக்கிறோம்.

## முக்தி தரும் பக்தித் தொண்டு

கதிரவன், நீரில் காணப்படும் அதன் பிரதிபலிப்பிலிருந்து எப்போதும் விலகியிருப்பதைப் போல, ஆத்மாவானது ஜடவுடலில் தங்கியிருந்தாலும் ஜட இயற்கை குணங்களால் பாதிக்கப்படாமலும் அதன் உரிமையாளராகக் கருதாமலும் செயல்படுவதால் செயல் விளைவுகளிலிருந்து விலகியிருக்க முடியும். ஜட இயற்கையால் எழும் பொய் அஹங்காரத்தின் மயக்கத்தால் ஒருவர் தன் உடலை தானாக இனம் கண்டு ஜட செயல்களில் ஆழ்ந்து விடுகிறார். மேலும் எல்லாவற்றிற்கும் தானே உரிமையாளர் என்று தவறாக எண்ணுகிறார். இதனால் கட்டுண்ட ஆத்மா 84 இலட்சம் வகையான உயிரினங்களில் உடல் விட்டு உடல் மாற வேண்டியுள்ளது.

உண்மையில், ஆத்மா ஜடவுலகத்திற்கு அப்பாற்பட்டது. இருப்பினும் ஜட இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான தனது ஆசையினால் ஜடவுலகின் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படுகிறான். இது கனவைப் போன்றது. இந்த போலியான சூழ்நிலையிலிருந்து முக்தி பெற ஒருவர் உலகப் பற்றின்றி மிகவும் தீவிரமாக கிருஷ்ணருக்குத் தொண்டு புரிவதே வழியாகும். பகவான் கிருஷ்ணரின் திருநாமத்தை உச்சரிப்பதாலும் அவரைப் பற்றி கேட்பதாலும் கலப்படமற்ற பக்தித் தொண்டின் நிலைக்கு ஒவ்வொருவரும் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

எல்லா உயிரினங்களையும் சமமாகவும் யாரிடமும் பகைமையின்றியும் அதே சமயம் பற்றின்றியும் மனத் துறவுடன் அமைதியாக பரம புருஷரிடம் எல்லா முடிவுகளையும் விட்டுவிட்டு என்றும் அழியாத நித்திய தொண்டினை ஆற்ற வேண்டும். ஒரு பக்தர் எளிதாகக் கிடைக்கும் வருமானத்தில் திருப்தியடைய வேண்டும். மிதமான உணவு, தனியிடத்தில் வசித்தல், தெய்வீக சிந்தனையுடன் அமைதியாக, நட்பாக அன்புடன் தன்னையுணர்ந்த நிலையில் அடக்கத்தோடு இருத்தல் வேண்டும்.

ஜடம் மற்றும் உணர்வு (உயிர்) இவற்றிற்கு இடையிலுள்ள வேறுபாட்டைப் புரிந்துகொண்டு ஜடமான இந்த உடலுடன் இனம் காண்பதால் உடல் சம்பந்தமானவற்றில் கவரப்படும் தவறை செய்யக் கூடாது. இவ்வாறு உலகியல் கருத்துகளிலிருந்து விடுபட்டு உன்னதமான நிலையில் பொய் அஹங்காரமின்றி தூய்மையடைந்த புலன்களுடன் கிருஷ்ணருக்கு பக்தித் தொண்டு செய்ய வேண்டும்.

## தன்னையறிதல்

அனைத்து பொருள்களிலும் பரம புருஷ பகவான் இருப்பதை தூய பக்தரால் காண முடியும். அப்பொருட்களில் அவர் ஒரு பிரதிபலிப்பாக மட்டும் இருந்தாலும், இருளான ஜட மாயையின் ஒளியாக இருப்பவர் பரம புருஷர் மட்டுமே என்பதை தூய பக்தர்கள் புரிந்துகொள்ள முடியும்.

சூரியன் வெகு தொலைவில் இருந்தாலும், அது நீரிலுள்ள பிம்பத்தில் ஒரு தோற்றமாகவும், அதன் ஒளி அறையின் சுவர்களில் மற்றொரு தோற்றமாகவும் வெளிப்படுகிறது. சூரியனை இவ்வாறு அதன் தோற்றங்களில் உணர்வதைப் போலவே, பரம புருஷ பகவானையும் அவரது சக்தியான ஜடப் பொருட்களில் ஒரு தூய பக்தர் உணர்கிறார்.

தன்னையுணர்ந்த ஆத்மா தான் பகவானின் நித்திய தொண்டன் என்று நினைக்கும்பொழுது, ஸத்வ, ரஜோ, தமோ குணங்களிலிருந்து விடுபட்டு, சுத்த-ஸத்வ நிலையை அடைகிறது. மேலும், உடல் மற்றும் மனமே தான் என்னும் தவறான எண்ணத்திலிருந்து விடுதலை அடைகிறது. தூய பக்தர் பௌதிக இன்பத்திற்கான பொருட்களுடன் தொடர்புடையவராக தோன்றினாலும் அவர் பொய் அஹங்காரத்திலிருந்து விடுபட்டவர் என்பதை அறிய வேண்டும்.

ஒருவர் ஆழ்ந்த உறக்கத்தில் கனவு காணும்பொழுது, அவர் தன்னை வேறுபட்ட நபராகவும் தன்னை இழந்தவராகவும் நினைத்துப் பார்க்கிறார். உண்மையில், நமது தனித்தன்மை எவ்வித மாறுபாடுமின்றி குறைபடாமல் இருக்கிறது. அதுபோலவே, ஜீவனின் தனித்தன்மை எச்சூழ்நிலையிலும் இழக்கப்படுவதில்லை. ஆன்மீக உலகிலும் நமது தனித்தன்மை தொடர்கிறது.

## தூய பக்தித் தொண்டு

அன்னை தேவஹூதி கபிலரிடம் தொடர்ந்து வினவினாள்: “ஜடப்பொருளாகிய இயற்கை என்றேனும் ஆத்மாவிற்கு விடுதலை தருகிறதா? ஒன்று மற்றொன்றை நித்தியமாக பற்றிக் கொண்டிருப்பதால் அவற்றின் பிரிவு எவ்வாறு சாத்தியமாகிறது? ஆத்மா நேரடியாக செயல் செய்யாதிருப்பினும், அவன் ஜட இயற்கையின் கட்டுப்பாட்டில் ஜடவுணர்வுடன் இருக்கும் வரை அவனுக்கு விடுதலை எவ்வாறு கிடைக்கும்? கட்டுண்ட வாழ்வைப் பற்றிய பயம் தத்துவ விசாரணைகளாலும் மனக்கற்பனைகளாலும் தற்காலிகமாக தவிர்க்கப்பட்டாலும், மூல காரணம்

### இருபத்தேழாம் அத்தியாயத்தின் பகுதிகள்

(1) **முக்தி தரும் பக்தித்தொண்டு (1–10)**
போதும் என்ற மனம்

(2) **தன்னையறிதல் (11–16)**
நித்திய சேவகன், தனித்தன்மை

(3) **தூய பக்தித் தொண்டு (17–30)**
அறிவுபூர்வமான கேள்வி
அகர்மா, துன்பமற்ற இடம்

தொடர்ந்து இருப்பதால், அந்த பயம் மீண்டும்மீண்டும் தோன்றி தொல்லை தருமே?"

தேவஹூதியின் அறிவார்ந்த கேள்விகளுக்கு பகவான் கபிலர் பதிலளித்தார்: அன்புள்ள அன்னையே, ஒருவர் (ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ளதுபடி) என்னைப் பற்றிய உபதேசங்களை அல்லது ஸ்ரீமத் பகவத்கீதை, கபிலரின் போதனைகள் போன்ற) நான் எடுத்துரைத்த உபதேசங்களை கவனமாகக் கேட்பதன் மூலமாகவும், என்னுடனான பக்தித் தொண்டை தீவிரமாக நிறைவேற்றுவதன் மூலமாகவும் ஜடத்தளைகளிலிருந்து விடுதலை பெற முடியும். இந்நிலையில் அவர் செய்யும் செயல்களுக்கு எதிர்விளைவுகள் கிடையாது, ஜடவுலகின் எல்லா களங்கங்களிலிருந்தும் அவர் விடுதலையடைகிறார்.

நெருப்பை உண்டாக்கும் மரக்குச்சிகளே நெருப்பிற்கு இரையாவது போல புலன்களால் செய்யப்படும் பக்தித் தொண்டினால் புலன்கள் தூய்மைபடுத்தப்படுகின்றன. ஜட இயற்கையின் மீது ஆதிக்கம்செலுத்தவிரும்பும்தனதுதவறினைஉணர்ந்து ஜட விஷயங்களை பகவானின் தொண்டில் ஈடுபடுத்துவதால் உயிர்வாழி விடுதலையடைகிறான். கனவில் அச்சுறுத்தும் விஷயங்கள் விழித்தெழுந்த பின் பாதிப்பதில்லை. அதுபோலவே மாசடைந்த நிலையில் உள்ள உணர்வு, தூய்மையடைந்து கிருஷ்ண உணர்வாக முன்னேற்றம் அடையும்பொழுது, அது விழிப்புற்ற நிலை எனப்படுகிறது. அத்தகைய அறிவொளி பெற்ற ஆத்மாவை ஜடவுலக செயல் விளைவுகள் பாதிப்பதில்லை.



நெருப்பை உருவாக்கும் மரக்குச்சி நெருப்பிற்கு இரையாகுவதைப் போலவே, புலன்களால் செய்யப்படும் பக்தியினால் புலன்கள் தூய்மையடைகின்றன.

இத்தகைய தூய பக்தர், பிரம்ம லோகத்திற்கு ஏற்றம் பெற்று நீண்ட வாழ்வு வாழும் ஆசை உட்பட எவ்வித ஆசையும் அற்றவராகிறார். அவர் எனது எல்லையற்ற கருணையினால், எனது நித்ய சேவகன் என்னும் தனது உண்மை நிலையை அடைகிறார். இவ்வாறு எல்லா சந்தேகங்களிலிருந்தும் விடுபட்டு எனது ஆன்மீக சக்தியின் முழு பாதுகாப்பிலுள்ள எனது தெய்வீக இருப்பிடத்தை நோக்கி நிலையாக முன்னேறுகிறார். தற்போதைய பூதவுடலைக் கைவிட்ட பின் எனது இருப்பிடத்தினை அடையும் அவர் அங்கிருந்து மீண்டும் துன்பகரமான இவ்வுலகிற்கு வருவதில்லை.

பக்குவமடைந்த யோகி, யோக சித்திகளிலும் ஜடப்பொருட்களிலும் கவர்ச்சியற்றவராகும்பொழுது, மிகவிரைவில் என்னை அடைகிறார். அவர் முழுமையாக என்மீது பற்று கொண்டிருப்பதால் மரணம் அவரைத் தீண்டாது.

திரு. வனமாலி கோபால தாஸ் அவர்கள், இஸ்கான் சார்பில் விருந்தாவனத்தில் நடைபெறும் பாகவத உயர்கல்வியைப் பயின்றவர்; இஸ்கான் கும்பகோணம் கிளையின் மேலாளராகத் தொண்டு புரிந்து வருகிறார்.



## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

உங்களுடைய பகவத் தரிசனம் 15ஆம் தேதிக்குள் வரவில்லை என்றால் எங்களைத் தொடர்புகொள்ள: 9894814553, 9543482175, tamilbtg@gmail.com

# அனைத்தையும் நாங்கள் வழிபடுகிறோம்



**பக்தர்:** ஸ்ரீல பிரபுபாதரே, கிருஷ்ண உணர்வில் இல்லாத நிலையே பௌதிக நிலை என்று நீங்கள் கூறியதைக் கேட்டுள்ளேன். அப்படியெனில், பௌதிகம் என்பது என்ன?

**ஸ்ரீல பிரபுபாதர்:** எதுவும் பௌதிகமானதல்ல. நீங்கள் கிருஷ்ண உணர்வில் முன்னேற்றமடையும்போது, உங்களுக்கு எதுவும் பௌதிகமானதில்லை. இந்த மலரை கிருஷ்ண உணர்வோடு நாம் அர்ப்பணிக்கும்போது, இது பௌதிகமாகிவிடுமா?

**பக்தர்:** இல்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இஃது ஆன்மீகமாக எவ்வாறு மாறியது? மரத்திலிருக்கும்போது இது பௌதிகமாக இருந்தது, தற்போது ஆன்மீகமானதா? இல்லை. இஃது ஆன்மீகமானதே. இதனை நான் என்னுடைய புலனின்பத்திற்காக நினைக்கும்போது, இது பௌதிகமாகிறது. இதனை கிருஷ்ணரின் இன்பத்திற்காக நாம் பறிக்கும்போது ஆன்மீகமயமாகிறது.

**பக்தர்:** அப்படியெனில் இந்த முழுவுலகமும் ஆன்மீகமயமாகுமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். நாம் அதையே விரும்புகிறோம். அனைத்தையும் கிருஷ்ணரின் சேவையில் பயன்படுத்தும்போது இந்த உலகமே ஆன்மீக உலகமாகும்.

**பக்தர்:** அப்படியெனில், நாம் கிருஷ்ணரின் எல்லா படைப்புகளையும் புகழலாம். இம்மலர் கிருஷ்ணருடைய படைப்பு என்பதால், இது மிகவும் அழகாக உள்ளது என்று கூறலாமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். நாம் இதையே உணர்கிறோம். மாயாவாதிகள், *ஜகன் மித்யா*, "இந்த உலகம் ஒரு பொய்யான தோற்றம்" என்று கூறுகின்றனர். ஆனால் நாம் அவ்வாறு சொல்வதில்லை. கிருஷ்ணர் அவருடைய ஆனந்தத்திற்காக பலவிதமான வஸ்துக்களைப் படைத்திருக்கின்றார். நான் அவற்றை பொய்யான தோற்றம் (*மித்யா*) என்று ஏன் கூற வேண்டும்? நீங்கள் ஒரு நல்ல வீட்டைக் கட்டி எனக்கு அழைப்பு விடுக்கும்போது, நான் அதனை ஒரு பொய்யான தோற்றம் என்று கூறினால்...

**பக்தர்:** நான் மனவருத்தத்திற்கு உள்ளாவேன். ஏனெனில், அஃது ஒரு பொய் தோற்றமாக இருந்தால், என்னால் அதனை அனுபவிக்க இயலாது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** (புன்னகைத்தபடி) எவ்வளவு மனவருத்தத்திற்கு உள்ளாவாய்? எல்லாம் பொய்

தோற்றம் என்பது அசுரர்களின் கூற்று என்று பகவத் கீதை விளக்குகின்றது. *அஸத்யம் அப்ரதிஷ்டம் தே ஜகத் ஆஹுர் அனீஷ்வரம்.* அயோக்கியர்களான அசுரர்கள் இவ்வுலகை பொய் என்று உரைக்கின்றனர். இதற்கு காரணமோ கட்டுப்பாட்டாளர்களோ இல்லை என்கிறார்கள். இவை அசுரர்களுக்கான வரையறை.

ஆனால் கிருஷ்ணர் *ஸத்யம்* (உண்மை) என்பதால், அவரது படைப்புகளும் ஸத்யமாகவே இருக்க வேண்டும், அவரது ஆற்றல்களும் ஸத்யமாகவே இருக்க வேண்டும். ஏன் இதை பொய் என்று சொல்ல வேண்டும்? நாங்கள் இவ்வாறு போதிப்பதில்லை. மாயாவாதிகளே இவ்வாறு போதிக்கின்றனர்.

**பக்தர்:** ஒருவர் கிருஷ்ணரின் சிலைகளைக் காணும்போது கல்லாக அல்லது மரமாகக் காண்கிறார். அஃது அவருக்கு பௌதிகமாகத் தோன்றும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அஃது அவருடைய அறியாமை. எப்படி அது பௌதிகமாகும்? அந்த கல்லும் கிருஷ்ணரின்

**“மின்சாரம் எங்கும் உள்ளது. மின்சாரத்தைப் பற்றிய அறிவுடையவர் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்திருப்பார். அதுபோலவே, கிருஷ்ணர் எங்கும் வீற்றுள்ளார், அவர் கல்லிலும்கூட வீற்றுள்ளார். பக்தர்கள் மட்டுமே இதை அறிந்துள்ளனர்.”**

சக்தியாயிற்றே. உதாரணமாக மின்சாரம் எங்கும் உள்ளது. மின்சாரத்தைப் பற்றிய அறிவுடையவர் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்திருப்பார். அதுபோலவே, கிருஷ்ணர் எங்கும் வீற்றுள்ளார், அவர் கல்லிலும்கூட வீற்றுள்ளார். பக்தர்கள் மட்டுமே இந்த கல்லைக்கூட கிருஷ்ணரின் புகழைப் பரப்புவதற்காக பயன்படுத்துகிறார்கள். அயோக்கியர்களுக்கு இவை தெரிவதில்லை. கிருஷ்ணரைத் தவிர வேறு நோக்கமில்லாத காரணத்தால், பக்தர்களுக்கு இவை தெரிகின்றன. கிருஷ்ணர் ஏன் கல்லிலும் இருக்கக் கூடாது? இதில் கிருஷ்ணர் உள்ளார். மாயாவாதிகள் அருவவாதத்தை போதிக்கின்றனர், ஆனால் வேற்றுமையைக் காண்கின்றனர். இது கல் என்றும், இதில் கிருஷ்ணர் இல்லை என்றும் வேறுபடுத்திப் பார்க்கின்றனர். எல்லாம் ஒன்றுதான் என்றால், ஏன் வேற்றுமையைக் கொண்டு வருகிறீர்கள்?

**பக்தர்:** கிருஷ்ண உணர்வுடைய நபர்கள், கிருஷ்ணர் கல்லில் இருப்பது போலவே விக்ரஹத்திலும் இருக்கிறார் என்று எண்ணுவார்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம்.

**பக்தர்:** அதில் உள்ளவாறே?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். ஏன் இருக்கக் கூடாது.

**பக்தர்:** ஆனால், நாம் விக்ரஹங்களை இந்தியாவிலிருந்து செய்து பெறுகின்றோம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** கிருஷ்ணர் விளக்குகின்றார். “அனைத்தும் என்னில் உள்ளன, ஆனால் எல்லாவற்றிலும் நான் இல்லை.” இதுவே அசிந்திய-பேதாபேத தத்துவமாகும்—ஒரே நேரத்தில் ஒற்றுமையும் வேற்றுமையும் கொண்ட தத்துவம். அனைத்தும் கிருஷ்ணரே, ஆனால் நீங்கள் இந்த மேஜையை கிருஷ்ணராக வழிபடக் கூடாது. அவ்வாறு வழிபடுதல் அயோக்கியத்தனம்.

இந்த சூரிய ஒளியும் ஒருவிதத்தில் சூரியனே, அப்படித்தானே? அதே சமயத்தில் சூரிய ஒளி உங்கள் அறையில் இருந்தால், சூரியனே இருக்கிறது என்று கூற இயலாது. இதுவே அசிந்திய-பேதாபேத தத்துவமாகும்.

**பக்தர்:** ஆனால், நீங்கள் கிருஷ்ணரைக் கல்லிலும் காணலாம் என்கிறீர்கள்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். ஏன் காணக் கூடாது?

**பக்தர்:** கல்லினுள் உள்ள கிருஷ்ணரை நாம் வழிபடலாம் அல்லவா?

**"பல மூடர்கள் வாழ்க்கையை தவறாக பயன்படுத்துவதை நாம் காண்பதால் பிரச்சாரம் செய்கிறோம். சில அறிவுரைகளை தந்து அவர்களை மேம்படுத்த விரும்புகிறோம். இதுவே நமது இயக்கத்தின் கொள்கையாகும்."**

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். நாங்கள் அனைத்தையும் வழிபடுவோம். நாங்கள் கிருஷ்ணரை எங்கும் காண்கிறோம். நாங்கள் இந்த மரத்தை கிருஷ்ணரின் சக்தியாகக் காண்கிறோம். ஆதலால், இந்த மரமும் வழிபாட்டிற்குரியது; ஏனெனில், கிருஷ்ணரும் கிருஷ்ணருடைய சக்தியும் வழிபடத்தக்கதே. எனவே, நாம் "ஹரே கிருஷ்ண" என்கிறோம். ஹரே என்பது கிருஷ்ணரின் சக்தியைக் குறிக்கும்.

நாங்கள் அனைத்தையும் வழிபடுகிறோம், எங்களுடைய குழந்தைப் பருவத்தில் ஒரே ஒரு நெல் மணி தவறி விழுந்தால்கூட, அதனை உடனே எடுத்து சிரமேற் கொண்டு அதற்கு மரியாதையளிக்க பயிற்றுவிக்கப்பட்டோம். கிருஷ்ணருடன் எவ்வாறு அனைத்தையும் தொடர்புபடுத்திக் காண்பது என்பதை எங்களுக்கு ஆன்றோர்கள் பயிற்றுவித்தார்கள். இதுவே கிருஷ்ண உணர்வாகும்.

எனவே, நாங்கள் எதையும் உபயோகமற்றதாக, தவறாக பயன்படுத்த என்றும் விருப்பம் கொண்டதில்லை. நாம் ஏன் பிரச்சாரம் செய்கின்றோம்? ஏனெனில், பல மூடர்கள் வாழ்க்கையை தவறாக பயன்படுத்துவதை நாம் காண்கின்றோம். சில அறிவுரைகளை தந்து அவர்களை மேம்படுத்த விரும்புகிறோம். இதுவே நமது இயக்கத்தின் கொள்கையாகும்.

"இவர்கள் நரகத்திற்குச் செல்லட்டும்," என்று நாம் நினைத்திருக்கலாம். மாயாவாதிகள் சமாதி நிலையை அடைவதற்காக இமயம் செல்கின்றனர். ஆனால், நாம் லாஸ் ஏஞ்ஜல்ஸ் நகரத்திற்கு வந்திருக்கின்றோம். ஏன்? "அந்தோ!! இந்த மக்கள் மாயையால் பீடிக்கப்பட்டு துன்பப்படுகின்றனரே, சில நல்ல அறிவுரைகளையாவது இவர்கள் பெறட்டும்," என்பதே நமது இயக்கத்தின் கொள்கையாகும்.

நாங்கள் அனைத்தையும் எவ்வாறு கிருஷ்ணருக்காக பயன்படுத்துவது என்பதையும் எவ்வாறு கிருஷ்ணர் அனைத்திலும் உள்ளார் என்பதையும் பயிற்றுவிக்கின்றோம். கிருஷ்ணரை அனைத்திலும் காண்பதே நமது இயக்கம். கிருஷ்ணர் கூறுகின்றார், "யாரொருவர் என்னை எங்கும் காண்கின்றாரோ அனைத்தையும் என்னில் காண்கின்றாரோ, அவரே பக்குவமான நபர்."

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி
(நவம்பர் 1, 2016 முதல் டிசம்பர் 15, 2016 வரை)

### நவம்பர்

4, வெள்ளி, ஸ்ரீல பிரபுபாதர் மறைவு நாள் (மதியம் வரை விரதம்)

11, வெள்ளி, ஸ்ரீல கௌரகிஷோர தாஸ பாபாஜி மறைவு நாள், பீஷ்ம பஞ்சகத்தின் முதல் நாள், உத்தானா ஏகாதசி விரதம், மறுநாள் விரதம் முடிக்கும் நேரம்: 06:09–06:25

13, ஞாயிறு, நான்காவது சாதுர்மாதத்தின் கடைசி நாள்,

14, திங்கள், பீஷ்ம பஞ்சகத்தின் கடைசி நாள்,

25, வெள்ளி, உத்பன்ன ஏகாதசி விரதம், மறுநாள் விரதம் முடிக்கும் நேரம்: 06:15–10:06

### டிசம்பர்

10, சனி, ஸ்ரீமத் பகவத் கீதை உபதேசிக்கப்பட்ட நாள். மோக்ஷத ஏகாதசி விரதம், மறுநாள் விரதம் முடிக்கும் நேரம்: 06:23–10:13

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோயில்கள்

**ஒசூர்**—ஜெய்நகர் ஹவுஸிங் காலனி, அலசநத்தம் ரோடு, ஆவலபள்ளி (அஞ்சல்), ஒசூர் - 635109. ☎ 94431 22623, 91509 23433, 99431 28215. மின்னஞ்சல்: iskconhosur.tn@gmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612001. ☎ 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகந்நாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641014. ☎ (0422) 2574508, 2574812/13. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net, www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த சுவாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600119. ☎ (044) 24530921/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com, www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600020. ☎ (044) 24456199.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600011. ☎ 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**புதுக்கோட்டை**—640, வடக்கு 3வது தெரு, புதுக்கோட்டை ☎ 96556 97556 / 87543 98108. மின்னஞ்சல்: iskconpudukkottai@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636012. ☎ (0427) 2001686, 2345545, 94887 01427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net, www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627002. ☎ (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**துறையூர்**—38/2, மாருதி நகர், துறையூர் - 621010. ☎ 70926 25784, 96293 63480. மின்னஞ்சல்: rukmiha.jps@pamho.net.

**வேலூர்**—ஹரே கிருஷ்ண நிலம், 5/459, மின்னல் நகர், பொய்கை மோட்டூர் அஞ்சல், விமான நிலையம் அருகில், வேலூர் - 632114. ☎ (0416) 2914343, 94429 53417. மின்னஞ்சல்: akinchan_bvks97@rediffmail.com

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629002. ☎98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625001. ☎ (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**திருப்பாலை, மதுரை**—ஸ்ரீ கிருஷ்ண பலராம் கோயில், யாதவ ஆண்கள் கல்லூரி அருகில், திருப்பாலை, மதுரை - 625014. ☎ 96558 15540. மின்னஞ்சல்: iskcontiruppallai@gmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம் - 620006. ☎ (0431) 2433945.

**பாண்டிச்சேரி**—பிளாட் எண்:2B, முதல் தளம், 7ஆவது கிராஸ் கார்னர், கிருஷ்ண நகர் மெயின் ரோடு, கிருஷ்ண நகர், பாண்டிச்சேரி - 605008. ☎ 94434 68923. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**அருப்புக்கோட்டை**—13, குழந்தைவேல்புரம், 4வது தெரு, திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை - 626101. ☎ 89391 17456. மின்னஞ்சல்: venudhari@pamho.net.

**ஆரணி**—31/1, இந்திரா நகர், கமல் திருமண மண்டபம் அருகில், ஆரணி - 632301. ☎ 88703 77122.

**கரூர்**—9/1, செங்குந்தாபுரம் முதல் குறுக்கு தெரு, M.M.காம்ப்ளக்ஸ், யூனியன் பாங்க் கட்டிடம், கண்ணன் பல்பொருள் அங்காடி எதிரில், கரூர் - 639002. ☎ 72009 74090. மின்னஞ்சல்: iskconkarur@gmail.com

**காவேரிப்பட்டினம்**—10/75, தாம்ஸன் பேட்டை, காவேரிப்பட்டினம். ☎ 98941 92169, 87547 60279.

**கிருஷ்ணகிரி**—2/53A, இரண்டாவது குறுக்குத் தெரு, கோ-ஆப்பரேடிவ் காலனி, கிருஷ்ணகிரி. ☎ 93442 90166.

**தர்மபுரி**—2J, அப்பாவு நகர், பிள்ளையார் கோயில் தெரு, மீனாட்சி நாராயண மஹால் அருகில், தர்மபுரி - 636701. ☎ 90036 31537.

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோயில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637001. ☎ 94435 00270, 96775 83676.

**நெய்வேலி**—கோகுல கண்ணன் கோயில் வளாகம், தச்சர் சாலை, வட்டம்-25, நெய்வேலி - 607803. ☎ 98945 30533, 94434 39411

உலகின் இதர பகுதிகளிலுள்ள கோயில்களை அறிய, அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகலாம், அல்லது www.krishna.com என்ற இணைய தளத்தில் காணலாம்.

## இதர சத்சங்க நிகழ்ச்சிகள்

இஸ்கான் கோயில்களிலிருந்து தொலைவிலிருக்கும் அன்பர்களின் நன்மைக்காக, வாராந்திர சத்சங்க நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகின்றன.

**கும்பகோணம் பகுதியில்:** எலுமிச்சங்க பாளையம், 94882 06353; குத்தாலம், 99947 46106; மெலட்டூர், 73588 01551.

**கோயமுத்தூர் பகுதியில்:** அவினாசி, 94437 75416; ஈரோடு, 94865 83424; ஊட்டி, 99945 53250; கவுண்டம்பாளையம், 98422 15503; காளம்பாளையம், 94433 54802; குனியமுத்தூர், 94433 54802; கோவைபுதூர், 94433 54802; சிஎம்சி மருத்துவக் கல்லூரி அருகில், 98430 84443; சிங்காநல்லூர், 2574812; செங்காலியப்பன் நகர், 94860 10131; சேரன் மாநகர், 94860 10131; சௌரிபாளையம், 98422 52308; டிவிஎஸ் (TVS) நகர், 90255 38093; டெக்ஸ்டூல் (சத்தி ரோடு), 2574812; திருமுருகன் பூண்டி, 93632 03564; நீலிகோணம் பாளையம், 96007 81299; பீளமேடு, கல்லூரி நகர், 93677 30344; பீளமேடு, பாலன் நகர், 2571266; ராம் நகர், 99946 23608; விசியல் தெரு, 98940 16108.

**சென்னை பகுதியில்:** அசோக் நகர், 94452 12281; அண்ணா நகர் மேற்கு, 93806 66794; ஆவடி, 98406 84856; கீழ்கட்டளை, 94456 74080; கே.கே.நகர், 94440 63643; தாம்பரம் மேற்கு, 98407 97062; தியாகராய நகர், 98402 02599; பெருங்களத்தூர், 86950 53055; போரூர், 92821 53655; மறைமலை நகர், 98840 81593; முகப்பேர் கிழக்கு, 91761 23336; மேற்கு மாம்பலம், 98400 27800; வேளச்சேரி, 22432510.

**சேலம் பகுதியில்:** பெரமனூர் ரோடு, 97873 88360; வலசையூர், 98654 26916; மேச்சேரி, 96884 88650.

**ஸ்ரீரங்கம்/ திருச்சி பகுதியில்:** கே.கே.நகர், 90031 45469; நொச்சியம், 0431 2562813; பெரியகடை வீதி, 98438 97546; பெல் (BHEL) குடியிருப்பு, 94425 21283; மண்ணச்சநல்லூர், 94427 77481; லால்குடி, 98424 72847.

# பகவத் தரிசனம்

ஆபாசம், சினிமா, விளையாட்டு என்று எத்தனை நாட்கள் படித்துக் கொண்டிருப்பீர்? முறையான ஒரு சீடப் பரம்பரையில் பெறப்பட்ட ஆன்மீகச் செய்திகள் தங்கள் வீட்டின் கதவுகளைத் தட்ட வேண்டாமா? பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக மாறுங்கள்.




- உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு
- ஆழ்ந்த தத்துவக் கட்டுரைகள்
- ஆன்மீக ஆனந்தம்
- நாட்டின் நிகழ்வுகளுக்கான ஆன்மீகப் பார்வை
- கண்களைக் கவரும் அழகிய படங்கள்
- இன்றைய உலகத்திற்கு உகந்த ஆன்மீக வழிகாட்டி
- எளிய தமிழில்...

## சந்தா புதுப்பிப்போருக்கான சலுகை

- தங்களுடைய சந்தாவினை இரண்டு அல்லது ஐந்து வருடத்திற்குப் புதுப்பியுங்கள்.
- ராதா கிருஷ்ணரின் லேமினேஷன் செய்யப்பட்ட படம் தங்களுடைய இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக மாறுங்கள்!

பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!

## பகவத் தரிசனம்,

சந்தா அலுவலகம்: இஸ்கான், 7c வாசன் தெரு, பெரம்பூர், சென்னை-600011.

தொலைபேசி: 98948 14653, 95434 82175. வாட்ஸ்-அப்: 95434 82175. மின்னஞ்சல்: tamilbtg@gmail.com

☐ ஆம், என்னை பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக இணைத்துக் கொள்ளுங்கள்

பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

☐ ஒரு வருடம் ரூ 200

☐ இரண்டு வருடம் ரூ 400

☐ ஐந்து வருடம் ரூ 900

பின்கோடு: __________ தொலைபேசி எண்கள்: ____________________

மின்னஞ்சல்: ____________________

தங்கள் வரைவோலைகளும் (DD) காசோலைகளும் (Cheque) "Bhaktivedanta Book Trust" என்ற பெயரில் இருக்க வேண்டும். www.tamilbtg.com என்னும் எங்களுடைய இணையதளத்திலும் பணம் செலுத்தலாம்.

# தக்ஷனின் யாகத்தில் பகவான் விஷ்ணு தோன்றுதல்



RNI Reg.No. MAHTAM/2012/41871
Date of Publication: 27th of Previous month
Postal Regn. No. MCN/239/2015-2017
Posted at Egmore RMS, Patrika Channel,
Chennai-8 on 1, 2, 3, or 4th of every month

தங்கமயில்
தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க
THANGAMAYIL
Thangam Vanga, Thangamayilukku Vanga!
H.O: 0452 2345553
தென் தமிழகமெங்கும்...
Throughout South Tamil Nadu...